விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி

பக்கங்கள்: பதின்னான்கு — Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 ஆடி 05 செவ்வாய்க்கிழமை (21.07.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 214

# தமிழ் மக்களுக்கு தீர்வு வழங்க ஜனாதிபதி உறுதியாகவுள்ளார்

## யாழ். வந்த போக்குவரத்து அமைச்சர் தகவல்

(யாழ்ப்பாணம்)

யார் எதிர்த்தாலும் தமிழ் மக்களுக்கு தீர்வு வழங்குவதில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச உறுதியாகவுள்ளார் என போக்குவரத்து அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார். ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் தேர்தல் பிரசார அலுவலகத்தில் வைத்து ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவித்த போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். (14ஆம் பக்கம் பார்க்க)



# ஏ–9 பாதையூடான பஸ் சேவை இன்றும் ஆரம்பிக்கப்படலாம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.-கொழும்பு ஏ-9 பாதையூடான பஸ் சேவை ஆரம்பிக்க அரசு தயாராகவுள்ளது . அது இன்று கூட ஆரம்பிக்கப்படும் என போக்குவரத்து அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் யாழ். அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கும் கண்டிக்கும் இடையில் ஏ-9 ஊடாக போக்குவரத்து சபையின் பஸ் சேவைகளை அடுத்த சில தினங்களில் மேற்கொள்ள அரசு தயாராகவுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஏ-9 பாதையூடாக மக்கள் போக்குவரத்து சேவையை ஆரம்பிக்குமாறு தினமும் வலியுறுத்தி வருகின்றார். அதன் முதல் கட்டமாக வட பிராந்திய போக்குவரத்து சபைக்கு ஏற்கனவே 5 புதிய பஸ்கள் வழங்கப்பட்டுள்ளது.

இன்றும் 4 புதிய பஸ்கள் வழங்கப்படுகின்றது. அடுத்த (14ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே...

- 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்
- தமிழக ஜோதிடர் கலாமணி சிவல்புரி சிங்காரம் எழுதும் ஆடி மாதப்பலன்கள்.

# யாழில் ஆயுதக்குழு இல்லை அரச படைகளே உள்ளன

## அமைச்சர் டக்ளஸ் உரை

(யாழ்ப்பாணம்)

நீண்ட காலத்திற்கு பின் வடக்கில் ஜனநாயக ரீதியில் தேர்தல் ஒன்றை மக்கள் சந்திக்கவுள்ளனர் எனவும் ஆயுதக் குழுக்கள் எதுவும் யாழ்ப்பாணத்தில் இயங்கவில்லை என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் யாழ். தேர்தல் பிரசார (14ஆம் பக்கம் பார்க்க)

# அ' புர வானூர்தி தள தாக்குதலை வழிநடத்தியவர் வவுனியாவில் கைது

(வவுனியா)

பிரதான வானூர்தி தளங்களில் ஒன்றான அனுராத புர வானூர்தி தளத்தின் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலுக்குப் பின்னணியில் இருந்த முக்கிய நபர் வவுனியா இடம்பெயர்ந்தவர்களுக்கான முகாமில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

2007 ஒக்டோபரில் நடைபெற்ற இந்தத் தாக்குதலின் போது 24 கரும்புலிகள் கலந்து கொண்டதாக கைது செய்யப்பட்டவர் தெரிவித்ததாக பொலிஸாரின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தான் உட்பட மூன்று பேர் அநுராதபுரம் முகாமுக்கு வெளியால் நின்று தாக்குதல் நடவடிக்கைகளுக்கான (14ஆம் பக்கம் பார்க்க)

# நலன்புரி முகாமிலுள்ள சிறுமிக்கு சிகிச்சையளிக்க நீதிமன்றம் உத்தரவு

(வவுனியா)

வவுனியா சைவப்பிரகாச நிவாரண நிலையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ள சிறுமி ஒருவருக்கு உடனடியாக மருத்துவ சிகிச்சை அளிக்க நடவடிக்கை எடுக்குமாறு வன்னிக் கட்டளைத் தளபதிக்கு உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது. இந்த நிவாரண நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள 13 வயதுச் சிறுமியை அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதித்து விசேட வைத்திய நிபுணர் ஒருவரினால் சிகிச்சையளிப்பதற்கு ஏற்பாடு செய்யுமாறு வன்னிக் கட்டளைத் தளபதிக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

சைவப்பிரகாச நிவாரண நிலையத்தில் தங்கியிருக்கும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் தாக்கல் செய்த அடிப்படை உரிமைமீறல் மனுவை நேற்று பரிசீலனைக்கு எடுத்துக் கொண்ட போதே (14ஆம் பக்கம் பார்க்க)

# பயண அனுமதி முறையை நீக்க விசேட நடவடிக்கை ஆரம்பம்

## அமைச்சர் டக்ளஸ் உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு செல்லும் போது பாதுகாப்பு படையினரிடமிருந்து பெறப்படும் பயண அனுமதி முறையை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நேற்று ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு (14ஆம் பக்கம் பார்க்க)



# முகாமைத்துவ உதவியாளர் சேவை வகுப்பு III

# நேர்முகத் தேர்வுக்கு 249 பேருக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 06.01.2007 ஆம் திகதியன்று நடத்தப்பட்ட அரச முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சையின் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் தகைமை பெற்ற மேலும் 249 பேரை வடக்கின் வசந்தம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் அரச முகாமைத்துவ சேவையில் உள்ள வெற்றிடங்களை தற்காலிக அடிப்படையில் நிரப்புவதற்கு இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனுமதி வழங்கியுள்ளார்.

இதனடிப்படையில் தெரிவு செய்யப் பெற்ற பரீட்சார்த்திகளுக்கான நேர்முகப் பரீட்சை, திகதி மற்றும் விபரங்கள் காலக் கிரமத்தில் மாவட்டச் செயலகத்தினால் அறிவித்தறுப்படும் என அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

இந் நேர்முகப் பரீட்சைக்காக பின்வரும் ஆவணங்களைப் பரீட்சார்த்திகள் சமர்ப்பிக்க வேண்டும்.

* தேசிய அடையாள அட்டை/செல்லுபடியான வெளிநாட்டு கடவுச் சீட்டு
* பிறப்புச் சான்றிதழின் மூலப்பிரதி
* பரீட்சை விண்ணப்பத்தில் குறிப்பிட்ட அனைத்துக் கல்விச் சான்றிதழ்களின், மூலப் பிரதிகளும், படப்பிரதிகளும்
* பாடசாலைவிடுகைச்சான்றிதழின் மூலப் பிரதியும் படப்பிரதியும்
* சான்றிதழ்களில் பெயர் வேறுபாடுகள் இருந்தால், சத்தியப் பிரகடனம்.
* கிராம அலுவலரின் சான்றிதழ், வாக்காளர் இடாப்பு அட்டவணையின் பொழிப்பு
* முகாமைத்துவ உதவியாளர் பரீட்சைப் பெறுபேற்று அட்டவணை.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோரின் விபரம் வருமாறு,

டி.பிள்யூ.எஸ். றுவான் - அரகன மேற்கு, நகுலுகமுவ, ஏ. நிவந்தன் - கொழும்பு 06, ஆர். சசிலன் - சங்கத்தானை, ரி. மணிமொழி - சித்தன்கேணி, கே.கிரிஜா - உடுவில் கிழக்கு, ஜெ. கணநாத் - நல்லூர், ஆர். தயாளினி - ஓட்டுமடம் வீதி, ரி. றதீபன் - நீர்வேலி, எஸ். தாரணி - கரந்தன், ஜே. நிருஜா - கோப்பாய் தெற்கு, எஸ். சர்மிளா - நீராவியடி, ஜி. உமாசுதன் - மானிப்பாய், தி. பாலராஜா - தும்பளை, எஸ். வினோதினி - கரவெட்டி, என். பிரதீபன் - பொலிகண்டி, பி. பிரசாத் - புலோலி,

ரி. கவிதா - பருத்தித்துறை, ஏ. பரிதா - பருத்தித்துறை, என். கீதரூபி - உடுப்பிட்டி, வி. லோஜிதன் - மீசாலை, வி. கதிர்ச்செல்வன் - மிருசுவில், எஸ். பிரதீபன் - அச்சுவேலி, ரி. லவன் - திருநெல்வேலி, கே. தயாளினி - சங்கரத்தை, எஸ். பிறேமா - அராலி தெற்கு, என். நித்தியா - கோண்டாவில், ரி. கௌசிகா - உரும்பிராய் மேற்கு, ஜே. வித்யா - திருநெல்வேலி, ஜே. வித்யா - அளவெட்டி வடக்கு, எஸ். நித்திலா - உடுவில் கிழக்கு, எஸ். சுகன்யா - புலோலி,

எம். பாபுஜி - கொழும்பு 11, எம். சுகந்தினி - அச்சுவேலி தெற்கு, எஸ். திகழ்மதி - சங்கரத்தை, கே.எஸ். ஞானசொருபன் - நல்லூர், ரி. நிர்மலா - சுதுமலை வடக்கு, ஏ. முகுந்தன் - திருநெல்வேலி கிழக்கு, ஏ. ஸ்ரீ சிவகாமி - திருநெல்வேலி வடக்கு, எஸ். கார்த்திகா - கொக்குவில் கிழக்கு, டி. எம். பிரியதர்சினி - பழைய பூங்கா வீதி யாழ்., ஆர். சதீஸ்குமார் - சுன்னாகம், ஏ. நர்மதா - ஆவரங்கால் கிழக்கு, எஸ். கோவர்தனி - நாவலர் வீதி, எஸ். மாலதி - இளவாலை, எஸ். சுகிர்தா - ஏழாலை வடக்கு, யூ. சுமலதா - புலோலி தெற்கு,

எஸ். சுகர்ணன் - புலோலி தெற்கு, பி. அன்ஜனா - அல்வாய், ரி. மயூரன் - வல்வெட்டித்துறை, எஸ். சிவகங்கா - அல்வாய், ஆர். வினோதினி - கரவெட்டி, ஆர். தேன்மொழி - உடுப்பிட்டி, பி. கோகிலவர்தினி - உடுப்பிட்டி, ஆர். சோபர்ணா - கரவெட்டி, எஸ். வினோதா - கரவெட்டி, எஸ். பிரதீபா - கொழும்பு 6, ஏ. ஜீவன் - கொடிகாமம், எஸ். வித்தியா - கொடிகாமம், ஏ. குகரூபன் - கைதடி, எஸ். சூரியகலா - காரைநகர்,

எஸ். தில்லைநகாராஜன் - உடுவில், பி. சிவதீபன் - நாயன்மார்கட்டு, எம். வரோதயன் - நல்லூர், எம். அருண்ராஜ் - யாழ்ப்பாணம், டி. சுபந்தினி - பாசையூர், என். அபிராமி கரவெட்டி கிழக்கு, எஸ். தயாளன் - கரணவாய், ஆர். சிந்துயா - அல்வாய் தெற்கு, ஜெ. கணபதிப்பிள்ளை - தும்பளை, கே. மனோஜா - வல்வெட்டித்துறை, வி. சுபாசன் - தும்பளை, எஸ். யாழினி - கரவெட்டி கிழக்கு, எஸ். சங்கீதா - பருத்தித்துறை, வி. ஜங்கரதாசன் - குருமன்காடு, எஸ். ரமேஸ் - கொழும்பு 13,

எஸ். சிவதர்சினி - கொடிகாமம், கே. முல்லைமாறன் - சாவகச்சேரி, கே. மதிவதன் மிருசுவில், வி. சுதர்சன் - கந்தர்மடம், எஸ். சசீவன் - நீர்வேலி, ஈ. காயத்ரி - இடைக்காடு, ஈ. சுதாகர் - திருநெல்வேலி வடக்கு, எஸ். ரிசிகேசன் - கோப்பாய், எஸ். சாருமதி - கல்வியங்காடு, கே. பிருந்தா - அரியாலை, பி. மயூரன் - யாழ்ப்பாணம், ஆர். ரதீபா - கொக்குவில், எஸ். கமலினி - வண்ணார் பண்ணை, பி. நிரஞ்சினி - கரவெட்டி, எஸ். பாலசிங்கம் - ஏழாலை,

என். அம்பிகை - கரவெட்டி வடக்கு, ஜி. பிரபா - வல்வெட்டித்துறை, ஜே. சங்கீதா - புலோலி, ஜி. அனோஜா - கொடிகாமம், ரி. கோகுலவதனன் - சாவகச்சேரி, ஈ. துசியந்தன் - மானிப்பாய், ரி. மோகனதாஸ் - புத்தூர், பி. சுபாமதி - சுதுமலை வடக்கு, எஸ். மதுராசினி - சங்கானை, எஸ். சிந்துயா - வண்ணார் பண்ணை, என். நந்தகுமார் - சுழிபுரம், ஆர்.கே. சஞ்ஜீவ் - கோப்பாய், ரி. றஜீபன் - கொக்குவில், ரி. கபிதா ஏழாலை, எம். பிரதீபா - கொக்குவில்,

எஸ். தவலாங்கி - அச்சுவேலி தெற்கு, ஏ. ஜெனனி - சுழிபுரம் மேற்கு, எஸ். மைத்திரியி - வண்ணார்பண்ணை, பி. சுஜிதா - உரும்பிராய் மேற்கு, எம். பிரசாந் - அரியாலை மேற்கு, ஜி. ஜனனி - கொக்குவில் கிழக்கு, கே. எஸ்.டி. டிலோஜனா - மானிப்பாய், எஸ். வைதேகி - உரும்பிராய் வடக்கு, ரி.ஜெ.மதனராஜன் - சுன்னாகம், ஈ. மாலதி - பருத்தித்துறை, வி. மேரிசுரேகா - பருத்தித்துறை, ஈ. உமா - தும்பளை, எஸ். சுயரதிரா - துன்னாலை மத்தி, ஆர். துசாந்தன் - புலோலி தெற்கு, பி. பிரபாகாந்தன் - புலோலி தெற்கு, என். தாரணி - புலோலி மத்தி,

என். ஜெயமயூரன் - வதிரி, வி. பாரதிதாஸ் - புலோலி கிழக்கு, பி. பிரதீபன் - முடக்காடு, ஆர். லீலா - நெடியக்காடு, பி. துசாந்தி - கரணவாய் கிழக்கு, ஈ. இளம்பிறை - வவுனியா, ஆர். பிரபா - மீசாலை கிழக்கு, ரி. சாந்தனா - சாவகச்சேரி, ரி. சசிக்கா - இளவாலை, என். சுகந்தினி - கஸ்தூரியார் வீதி, ஏ. வசந்ததாசன் - அச்சுவேலி, கே. சிவகௌரி - நீர்வேலி மேற்கு, கே. வசந்தகோகுலன் - உரும்பிராய் கிழக்கு, ஜே. கார்மில் - கொழும்புத்துறை,

கே. சுதாகரன் - இளவாலை, ஜி. பூரணி - பருத்தித்துறை, எம். பிரதாப் - புலோலி தெற்கு, எஸ். ஜமுனா - துன்னாலை வடக்கு, ரி. பாமதி - கரணவாய் தெற்கு, எஸ். கோகிலா - அல்வாய் கிழக்கு, பி. தமிழ்ப்பிரியா - வவுனியா, சி. சமந்தி - கொழும்பு, ரி. சுரேகா - சாவகச்சேரி, கே. குகநேசன் - அச்சுவேலி தெற்கு, பி. நிராஜினி - உரும்பிராய் கிழக்கு, எஸ். வரணி - யாழ்ப்பாணம், வி. அரவிந்தன் - இமையாணன் கிழக்கு, என். கிருஸ்ணரதி - நீர்வேலி, எஸ். சிந்துஜா - ஆனைக்கோட்டை, ரி. திருமாலினி - கோப்பாய் மத்தி,

என். லிசாலினி - தாவடி தெற்கு, எஸ். திலீபன் - இடைக்காடு, எம். சாமினா - நீர்வேலி வடக்கு, எஸ். கௌசிகன் - இளவாலை, கே. நிரஞ்சன் - வண்ணார்பண்ணை, என். கல்யாணி - சுழிபுரம், ஆர். நிரோசா - உடுவில், ஜே. கொண்லாடியோஸ் - குருநகர், ஆர். மஞ்சுளா - மல்லாகம், பி. ரஜிதா - புலோலி தெற்கு, எஸ். தவராணி - பொலிகண்டி மேற்கு, ரி. பிரசன்னா - கொடிகாமம், கே. ஜனகன் - கொடிகாமம், எஸ். விஜயஸ்ரீ வட்டுக்கோட்டை,

ஏ. அமிர்தவர்சினி - கொக்குவில் மேற்கு எஸ். நிசானி - யாழ்ப்பாணம், ஆர். தயாளினி - வண்ணார்பண்ணை, எஸ். தக்சாயினி - அரசடி வீதி, ஜே. ரூபிகா - மானிப்பாய், எஸ். தயானி - நல்லூர், கே. தரணி - ஆனைக்கோட்டை, எம். ஜீவிதா - அராலி கிழக்கு, எம். தனுசியா - இருபாலை கிழக்கு, எஸ். கிருஸ்ண குமாரி - இணுவில் மேற்கு, ரி. தாரங்கினி - சங்கானை, எஸ். சண்முகவதனி - கொக்குவில் கிழக்கு, ஏ. நிதர்சன் - பிறவுண் வீதி, எம். கிதுசா - புலோலி தெற்கு, ஆர். விஜிகலா - புலோலி மேற்கு,

எஸ். நித்தியா - பருத்தித்துறை, கே. கோமலதா - இமையாணன் கிழக்கு, வி. ரமணன் - கரணவாய் மத்தி, ரி. மதுரா - வவுனியா, ரி. மதிவதனன் - கொழும்பு, ஆர். மாலதி - சங்குவேலி வடக்கு, ஏ.வி. வேணுசா - கொக்குவில் மேற்கு, ரி. அர்ஜுனா - சித்தன்கேணி, யூ. துசியந்தி - நல்லூர் கிழக்கு, எம். அபிராமி - யாழ்ப்பாணம், ஈ.ஜெ. ஒஸ்மன் ஜெரி - சுண்டுக்குளி, எஸ். சிவபாதசுந்தரம் - சுன்னாகம், கே. பாலகிருஸ்ணா - சுழிபுரம் கிழக்கு, கி. மனோகரன் - கோண்டாவில் மேற்கு, எஸ். விசாகன் - இணுவில் கிழக்கு, ஆர். வாசுகி - கொக்குவில் மேற்கு,

ஜி. கயூரன் - யாழ்ப்பாணம், ஏ. குண சர்மினி - புத்தூர், எஸ். சிறிசங்கர் - கே.கே.எஸ். வீதி, ஏ. கமிலா - கோண்டாவில் மேற்கு, வை. தர்சிகா - அராலி தெற்கு, ரி. பானுமகேந்திரா - கந்தர்மடம், ஆர். சிறிதரன் தொல்புரம் மத்தி, கே. தர்சினி - வண்ணார்பண்ணை. எஸ். யாழினி - கரவெட்டி கிழக்கு, பி. ஆரணி - சுண்டுக்குளி, பி. கேசிகா - வேலணை - 6. வி. வினோத் சுண்டுக்குளி, எஸ். மதனமோகனராஜ் - குப்ளான் வடக்கு, ரி. துசாந்த் - உடுவில், எஸ். கஸ்தூரி - புலோலி, ரி. பார்த்தீபன் - கரணவாய், எஸ். சுதர்சன் - வியாபாரிமூலை, வி. தாமரைச்செல்வி - பொலிகண்டி, எம். இளங்கோ - நெல்லியடி,

ரி. பிறேமகுமார் - இமையாணன் கிழக்கு, பி. உதயசாந்தி - இமையாணன் வடக்கு, கே. ரதிசன் - அல்வாய் கிழக்கு, எஸ். நளாயினி - பருத்தித்துறை, ஜி. மகிந்தன் - கிளிநொச்சி, வி. தர்சினி - மிருசுவில், ஜி. சிந்துஜா - கல்வியங்காடு, ஜெ. நிலானி - மானிப்பாய் வடகிழக்கு, பி. தாட்சாயினி - சுண்டுக்குளி, ரி. சுகிர்தா - புத்தூர் கிழக்கு, பி. ஞானவேல் - யாழ்ப்பாணம், பி. தபோதினி - நவாலி வடக்கு, என். சுபாஜினி - கரணவாய் கிழக்கு,

எஸ். சிவபிரியா - தெல்லிப்பளை, கே. பிரவீணா - திருநெல்வேலி, வை. பிரதீபா - பண்டத்தரிப்பு, என்.என். நிசாந்தினி - கந்தர்மடம், ரி. சுகிர்தா - நவக்கிரி, கே. நவசீலன் - ஆவரங்கால் மேற்கு, ஏ. மைதிலி - நல்லூர், ஆர். செந்தில்மாறன் - யாழ்ப்பாணம், என். சயந்தன் - அராலி தெற்கு, கே. பிரதீஸ்வரன் யாழ்ப்பாணம், ரி. துசியந்தன் - உரும்பிராய் வடக்கு, ஆர். யசிந்தா - காரைநகர், கே. அனுசியா - மல்லாகம், வி. தனுசியா - புலோலி வடகிழக்கு,

எம். இராதாகிருஸ்ணன் - தும்பளை, எம். குமுதினி - தும்பளை, வி. ஈழவேந்தன் - தும்பளை தெற்கு, ஜெ. ஜோசப் றெஜிந்திரன் - அல்வாய் வடமேற்கு, வி. ராதிகா - துன்னாலை வடக்கு, ரி. பிரியந்தி - கரணவாய் தெற்கு, எம். சுதாகர் - கரணவாய் கிழக்கு. (ச-5)

## திறமை மற்றும் சேவைமூப்பு அடிப்படையில் அதிபர் பதவி உயர்வுக்கு நேர்முகத் தேர்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கை அதிபர் சேவை வகுப்பு 3 தரம் 2-II மற்றும் தரம் 2-I பதவி உயர்வு தொடர்பாக கல்வி அமைச்சிற்கு விண்ணப்பம் செய்த மற்றும் விண்ணப்பம் செய்யாத அதிபர்களுக்குமான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 27, 28 மற்றும் 29 ஆம் திகதிகளில் முறையே யாழ்ப்பாணம்/ வடமராட்சி, தென்மராட்சி/ வலிகாமம், வேலணை ஆகிய கல்வி வலயங்களில் நடைபெறும் என கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் கே. மொகமட் தம்பி அறிவித்துள்ளார்.

குறிப்பிட்ட தினங்களில் குறிப்பிடப்படும் ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளது.

1996.12.31 ஆம் திகதிக்கு பின் ஓய்வு பெற்ற அதிபர்களையும் அன்றைய தினம் பரீட்சைக்கு அழைக்குமாறும் அவர் அறிவித்துள்ளார். (ச-5)

## போக்குவரத்து அமைச்சருக்கு தமிழ்மொழி தெரியாது!

## வெட்கப்படுகிறார் அமைச்சர்

(யாழ்ப்பாணம்)

இலங்கை போக்குவரத்து அமைச்சராகவுள்ள எனக்கு தமிழ் மொழி தெரியாது என்பதையிட்டு வெட்கப்படுகின்றேன். இதற்கு காரணம் அரசியல் செய்த குற்றமேயாகும். இவ்வாறு யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த போக்குவரத்துத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை பூராகவும் போக்குவரத்து அமைச்சராகவுள்ள எனக்கு தமிழ் மொழி தெரியாது என்பதையிட்டு வெட்கப்படுகின்றேன்.

இதற்கு காரணம் எனது தாய் தந்தை விட்ட பிழையில்லை. எமது நாட்டின் அரசியல் செய்த குற்றமே. வடக்கு கிழக்கிலுள்ள தமிழர் தென்பகுதியிலுள்ள சிங்களவர் ஒருவரை திருமணம் செய்தால் எமது சமூகம் தவறாக எடுத்துக் கொள்கிறது.

ஆனால் அமெரிக்காவிலோ பிரித்தானியாவிலோ திருமணம் செய்தால் வெளிநாட்டு மணமகனையோ மணமகளையோ திருமணம் செய்துவிட்டார் என மகிழ்ச்சிகொண்டாடுகின்றோம்.

எனவே எமது தாய்நாட்டில் சகல இனத்தவர்களும் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும் என்றார். (ச-5)

## அடுத்த 48 மணி நேரத்தினுள் 50 பஸ்களை திருத்த உத்தரவு

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் யாழ் சாலையிலுள்ள 50 பஸ்களை அடுத்த 48 மணி நேரத்தில் திருத்தியமைத்து சேவையில் ஈடுபடுத்துமாறு வட பிராந்திய போக்குவரத்துச் சபைக்கு பணித்துள்ளதாக போக்குவரத்து அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடபிராந்திய போக்குவரத்து சபையின் யாழ் சாலையில் நீண்ட காலமாக உதிரிப்பாகங்கள் இன்றி நூற்றுக்கு மேற்பட்ட பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படாமல் உள்ளன.

இதற்காக போக்குவரத்து அமைச்சு ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் நிதியினை வழங்கியுள்ளது. இந் நிதியின் மூலம் அடுத்த 48 மணி நேரத்திற்குள் 50 பஸ்களை திருத்தியமைத்து சேவையில் ஈடுபடுத்துமாறு வட பிராந்திய போக்குவரத்து சபையினரை பணித்துள்ளேன்.

வடக்கில் போக்குவரத்து பிரச்சினை உள்ளமை எமக்கு தெரியும். எனினும் அவற்றை நாம் படிப்படியாகவே சீரமைப்பு செய்ய முடியும் என்றார். (ச-5)

# இன்று ஒரு தகவல்

## அறிவால் வரும் ஆபத்து

குருவின் எதிரில் இளம் சீடர்கள் உட்கார்ந்திருந்தார்கள். குரு பாடம் நடத்திக் கொண்டிருந்தார். சீடர்களுக்கு ஒரு ஆசை.

அதாவது ஒரு முக்கியமான மந்திரத்தை குருவிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும்.

அது என்ன மந்திரம் என்றால் இறந்தவர்களை உயிர்ப்பிக்கும் மந்திரம்.

"குருவே தயவு செய்து அந்த மந்திரத்தை எங்களுக்கு உபதேசிக்க வேண்டும்" என்று கேட்டார்கள்.

"அது மிகவும் ஆபத்தானது. அது எதற்கு உங்களுக்கு? வேண்டாமே" என்றார் குரு.

"எங்களுடைய நம்பிக்கை உறுதிப்படுத்துவதற்காகத்தான் கேட்கிறோம். வேறொன்றுமில்லை" என்றார்கள் சீடர்கள்.

"பக்குவப்படாத அறிவு ஆபத்தானது" என்றார் குரு. இது சீடர்களுக்குப் புரியவில்லை.

குரு அதற்கு விளக்கம் கொடுத்தார்.

அந்த மந்திரத்தை எப்பொழுது பயன்படுத்த வேண்டும் என்ற ஞானம் ஏற்படும் வரை அதைத் தெரிந்து கொள்ளாமல் இருப்பது தான் நல்லது. இல்லையென்றால் ஆபத்து" என்றார்.

சீடர்கள் அதைக் கேட்பதாக இல்லை. பிடிவாதம் பண்ண ஆரம்பித்தார்கள்.

சரி... வாருங்கள் சொல்கிறேன் என்று சொல்லி அவர்களுக்கு அந்தப் புனித மந்திரத்தை ரகசியமாக உபதேசித்து விட்டு ஒரு எச்சரிக்கையும் செய்தார்.

"இந்த மந்திரத்தை நன்றாக ஆராய்ந்து பார்த்த பின்னர் தான் உபயோகிக்க வேண்டும். அவசரப்பட்டு எதையும் செய்து விடக்கூடாது" என்றார்.

சரி என்று சொல்லிவிட்டு அவர்களெல்லாம் எழுந்து போய் விட்டார்கள்.

ஒருநாள் அவர்களெல்லாம் மணற்பாங்கான இடத்தில் நடந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

ஓரிடத்தில் எலும்புகள் குவியலாகக் கிடந்தது. உடனே இந்த சீடர்கள் முன்பின் யோசிக்காமல் தியானமும் செய்யாமல் மந்திரத்தின் பயனை சோதித்துப் பார்க்க எண்ணி அந்த மந்திரத்தை உச்சரித்தனர்.

அவ்வளவுதான். அந்த எலும்புகள் ஓநாய்களாக மாறி அவர்களைத் துரத்தத் தொடங்கியது.

சீடர்களெல்லாம் தலைதெறிக்க ஓடினார்கள். ஓநாய்களும் விடவில்லை. அவர்களைத் துரத்திப் பிடித்துக் கடித்துக் குதற ஆரம்பித்தது.

அப்பொழுதுதான் சீடர்களுக்கு குரு சொல்லிய அறிவுரையின் அர்த்தம் புரிந்தது.

"பக்குவப்படாத அறிவு ஆபத்தானது" என்பது.

அதனால் நாம் நமது அறிவை வளர்த்துக் கொண்டால் மட்டும் போதாது. அந்த அறிவை எப்பொழுது எப்படி பயன்படுத்த வேண்டும் என்ற பக்குவமும் நமக்கு வரவேண்டும்.

அப்பொழுதுதான் வாழ்க்கை நல்லபடியாக அமையும். இந்தக் கால சிறுவர்களுக்கு அறிவு மிகவும் பக்குவப் பட்டிருப்பதை உணர முடிகிறது.

ஒரு சின்னப்பையனுக்கு பள்ளிக்கூடத்தில் மார்க்ஸ் லிஸ்ட் கொடுத்தார்கள். அவன் அதை வாங்கிக் கொண்டு அவசரமாக வீட்டுக்கு ஓடினான்.

எதிரில் வந்த ஒருவர், " என்ன அவசரம்? ஏன் இப்படி ஓடுகிறாய்?" என்று கேட்டார்.

"அம்மாவிடம் அடிவாங்க வேண்டும். அதற்காகத்தான் ஓடுகிறேன்" என்றான்.

"அடி வாங்குவதற்கா இவ்வளவு அவசரம்?"

"நான் போவதற்குள் அப்பா வீட்டுக்கு வந்து விட்டால் அவரிடம் அடிவாங்க வேண்டியிருக்கும். அதைத் தவிர்ப்பதற்காகத்தான் இப்படி ஓடுகிறேன்" என்றான் அந்தப் பையன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தென்மராட்சி கல்வி வலய தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

(நேற்றைய தொடர்ச்சி)

**பாவோதல்**

பிரிவு 1

சி.பியூலா(மீசாலை வீரசிங்கம் மகா வித்தி, இ.கோபிதா (கைதடி முத்துக்குமார சாமி வித்தி), கோ. சாகித்தியா (மிருசுவில் அ.த.க பாடசாலை)

பிரிவு 2

க.அனந்தா( கரம்பைக் குறிச்சி அ.த.க பாடசாலை), இ.அர்ச்சனா (சாவ இந்துக் கல்லூரி), தி.யதுட்ஷா (விடத்தற்பளை கமலாசினி வித்தி

பிரிவு 3

இ.லவீனா (வரணி மகா வித்தி, உ.குணசுகி (கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தி), த.விமலினி (அல்லாரை அ.த.க பாடசாலை)

பிரிவு 4

வே.லதுஜா (சாவ இந்துக் கல்லூரி), இ.சிவ அகிலா (மீசாலை வீரசிங்கம் மகா வித்தி, ப.கீதாஞ்சலி (கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தி

பிரிவு 5

து.டிலக்சனா (சாவ இந்துக் கல்லூரி), தி.ஹம்சவாகினி (மீசாலை வீரசிங்கம் மகா வித்தி), ச.கவித்திரா (கொடிகாமம் அ.த.க பாடசாலை)

**இசையும் அசைவும்**

பிரிவு 1

தா.யூட்சி றொபினா (கொடிகாமம் அ.த.க பாடசாலை), சி.அபர்னா (சாவ மகளிர் கல்லூரி), தயானி (கச்சாய் அ.த.க பாடசாலை)

**இசை தனி**

பிரிவு 2

உ.சுரெப்தா (வரணி மகா வித்தி, வா.சிந்துசன் (அல்லாரை அ.த.க பாடசாலை), சி.சரண்யா (மட்டுவில் சந்திரமௌலீச வித்தி

பிரிவு 3

க.பூங்குன்றன் (வரணி மகா வித்தி, தி.பிறிஸ்லா (மீசாலை வீரசிங்கம் மகா வித்தி, ம.பிரசாந்தினி (சாவ இந்துக் கல்லூரி)

பிரிவு 4

ந.கேதீஸ்வரன் (எழுதுமட்டுவாழ் அ.த.க பாடசாலை), ந.கவிப்பிரியா (சாவ இந்துக் கல்லூரி), ப.உஷாளினி (மீசாலை விக்கினேஸ்வரா வித்தி

பிரிவு 5

க.துவாரகன் (வரணி மகா வித்தி, த.ருசாந்தினி (சாவ இந்துக் கல்லூரி), த.தனுஷா (நாவற்குழி மகா வித்தி

**திறந்த போட்டிகள்**

இசை - குழு 1

சாவ இந்துக் கல்லூரி, சாவ மகளிர் கல்லூரி, எழுதுமட்டுவாழ் அ.த.க பாடசாலை.

குழு 2

சாவ இந்துக் கல்லூரி, சாவ மகளிர் கல்லூரி, மட்டுவில் சந்திர மௌலீச வித்தி

**நடனம் தனி**

பிரிவு 2

சி.கார்த்திகா (சாவ இந்துக் கல்லூரி), சு.கெசியா (சாவ மகளிர் கல்லூரி), ம.மதுவந்தி (எழுதுமட்டுவாழ் அ.த.க பாடசாலை)

பிரிவு 3

இ.பபிலா (சாவ இந்துக் கல்லூரி), கு.அனுசா (சாவ மகளிர் கல்லூரி), அ.மேரி பெசியா (கைதடி விக்கினேஸ்வரா வித்தி

பிரிவு 4

லோ.மயூரதி (சாவ இந்துக் கல்லூரி), சி.அபிராமி (சாவ மகளிர் கல்லூரி), செ.கோகுலபிரியா (வரணி ம.வித்தி

பிரிவு 5

ஆ.நிலானி (சாவ மகளிர் கல்லூரி), க.இந்திகா (சாவ இந்துக் கல்லூரி), சு.சுரேக்கா (யா வரணி ம.வித்தி

**நடனக் குழு**

சாவ இந்துக் கல்லூரி, சாவ மகளிர் கல்லூரி, கச்சாய் அ.த.க பாட சாலை.

**நாட்டிய நாடகம்**

சாவ மகளிர் கல்லூரி, எழுது மட்டுவாழ் அ.த.க பாடசாலை, சாவ டிறிபேக் கல்லூரி.

**நாட்டார் பாடல்**

மட்டுவில் சந்திரமௌலீச வித்தி, சாவ இந்துக் கல்லூரி, கச்சாய் அ.த.க பாடசாலை

**இலக்கிய நாடகம்**

சாவ டிறிபேக் கல்லூரி, கைதடி நாவற்குழி அ.த.க பாடசாலை, அல்லாரை அ.த.க பாடசாலை.

**வில்லுப்பாட்டு**

சாவ டிறிபேக் கல்லூரி, கச்சாய் அ.த.க பாடசாலை, மூன்றாம் இடம் இரு பாடசாலை உசன் இராமநாதன் மகா வித்தி,நாவற்குழி மகா வித்தி.

**விவாதம்**

வரணி ம.வி, மீசாலை விக்னேஸ்வரா வித்தி, மட்டுவில் ம.வி.

**தமிழறிவு வினாவிடை**

சாவ. இந்துக் கல்லூரி, சாவ. டிறிபேக் கல்லூரி, உசன் இராமநாதன் ம.வி.

**சிந்து நடை நாட்டுக்கூத்து**

ஸ்கரடி முத்துக் குமாரசாமி, மட்டுவில் சந்திர மௌலீச வித்தி

**வடமோடி நாட்டுக்கூத்து**

கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை.

**இசைநாடகம்**

மிருசுவில் அ.த.க. பாட சாலை.

(ஓ - 29)

## கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

டி.எஸ்.ஜ. நிறுவனத்தினால் நடத்தப்படவுள்ள கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டிகள் இன்று செவ்வாய்க் கிழமை காலை 8 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு பதிவு செய்யப்பட்ட அணிகள் யாவும் குறித்த நேரத்திற்கு முன்னர் வருகை தருமாறு போட்டி இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ-4)

## இராசி பலன்

*21.07.2009*
*(ஆடி 5, செவ்வாய்க்கிழமை)*
*சதுர்த்தசி முற்பகல் 11.40 மணிவரை*
*திருவாதிரை முற்பகல் 7.42 மணிவரை*
*இராகுகாலம் 3.01-4.31 மணிவரை*
*சுபநேரம் 10.31-12.01 மணிவரை*
*முதலாம் ஆடிச் செவ்வாய்*
*ஆடி அமாவாசை விரதம்*

| | |
|---|---|
| மேடம் | கூட்டுமுயற்சி, தனலாபம், உறவினர் வருகை, அந்நியர் சந்திப்பு. |
| இடபம் | போசன சுகக்குறைவு, மனச் சங்கடம், ரோகநிலை, அதிக செலவு. |
| மிதுனம் | வெகுமானம், நல்ல முயற்சி, மாதர் நட்பு, நல்ல தகவல். |
| கடகம் | காரிய அலைச்சல், தனவிரயம், குடும்பக் கவலை, உறவினர் சந்திப்பு. |
| சிங்கம் | காரிய நன்மை, பொருள் சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு, தொழில் விருத்தி. |
| கன்னி | செய்தொழில் விருத்தி, உடல் நலம், முயற்சி கைகூடும், தன வருவாய். |
| துலாம் | சரீரப் பிரயாசை, கட்டுப்பாடு, வீண்பயம், எதிர்பாரத செலவு. |
| விருச்சிகம் | காரிய தாமதம், எதிர்பாராத பகை, போசன சுகம், மனஸ்தாபம். |
| தனுசு | மனோதைரியம், செல்வாக்கு, காரிய அனுகூலம், தனவருவாய். |
| மகரம் | தடைப்பட்ட காரியம் கைகூடும, ஆரோக்கிய நிலை, நண்பர்கள் சந்திப்பு, ஜனவசியம். |
| கும்பம் | உடல்நலக்குறைவு, வியாபார விருத்தி, கௌரவக்குறைவு, முயற்சி தாமதம். |
| மீனம் | தன்னம்பிக்கை குறைவு, கல்வியில் ஆர்வம், ரோகபயம். |

வளவன்

## புலமைப்பரிசில் பயிற்சிப் பட்டறை

மாகாண கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் கடந்த மே மாதம் 19 திகதி முதல் நடத்தப்பட்டு வரும் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சையின் 6 ஆவது இறுதிப் பரீட்சை எதிர் வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை தென்மராட்சி வலயப் பாடசாலைகள் அனைத்திலும் நடத்தப்படவுள்ளது.

இப் பரீட்சைக்கான பரீட்சை வினாத்தாள்களை முன்னர் பெற்றுக் கொண்ட நிலையங்களில் இருந்து பெற்று பரீட்சையை நடத்துமாறு சகல அதிபர்களையும் வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிரேமகாந்தன் கேட்டுக் கொள்கின்றார். (ஓ)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் 1 Kg | திருநெல்வேலி ரூபா | யாழ்ப்பாணம் ரூபா | சாவகச்சேரி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 120 | 50 |
| உருளைக்கிழங்கு | 110 | 120 | 130 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 60 |
| தக்காளி | 140 | 160 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 60 |
| கோவா | 140 | 160 | -- |
| கரட் | 100 | 120 | 80 |
| பூசணி | 30 | 50 | 30 |
| புடோல் | 40 | 60 | 20 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 50 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 80 |
| பாகற்காய் | 80 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 25 | 40 | 30 |
| கரணைக் கிழங்கு | 60 | 80 | -- |
| பயிற்றங்காய் | 100 | 120 | 80 |
| லீக்ஸ் | 60 | 30 | 100 |
| பீற்றூட் | 40 | 60 | -- |
| கறிமிளகாய் | 40 | 60 | 60 |
| முருங்கைக்காய் | 200 | 250 | 200 |
| கீரை - 1 பிடி | 25 | 30 | 15 |
| தேசிக்காய் | 50 | 60 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 35 | 30 |

# யாழ்.பல்கலைக்கழக 2008/2009 கல்வியாண்டிற்கு அனுமதி பெறும் மாணவர்களின் விபரம்

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 2008/2009 ஆம் கல்வியாண்டுக்கு அனுமதிபெறும் மாணவர்களின் பெயர்ப் பட்டியல் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் மருத்துவ பீடத்திற்கு 100 பேரும், விவசாய பீடத்திற்கு 67 பேரும், உயிரியல் விஞ்ஞானத்திற்கு 42 பேரும், கணனி விஞ்ஞானத்திற்கு 10 பேரும், பௌதீக விஞ்ஞானத்திற்கு 85பேரும், தாதியியலுக்கு 9பேரும், முகாமைத்துவ பீடத்திற்கு 126பேரும், சங்கீதத்திற்கு 67 பேரும், நடனத்திற்கு 51 பேரும், சித்திரமும் வடிவமைப்பிற்கும் 25 பேரும் முதல்கட்டமாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்டுள்ளோர் விபரம் வருமாறு,

### மருத்துவ பீடம்

சி.ரகுராஜ், வி.ஜெயராஜா, எஸ்.லிஜா, எஸ்.விசாகன், ஆர்.கஜேந்திரநாதன், எஸ்.பாகினி, எஸ்.வன்னியசிங்கம், பி.கஜலக்சன், ஜெ.பஞ்சாட்சரம், எஸ்.நடராசா, பி.பிரகலாதன்,என்.கௌசிகன், ஆர். சிவராஜசுந்தரம்,எஸ்.சிவமைந்தன்,ரி.வினோபன், யு.தயாஸ்வரன், எம். ஏ.எம்.பிரமுதிதா, எஸ்.ஏ.ஜோசப், வி.எஸ். ஹன்டங்,எம்.ஐ.எவ். இல்லா,டி.சிவஞான சுந்தரம்பிள்ளை, என். கந்தசாமி, கே.விக்னன், கே.விஜயரட்ணம், என்.பி.ஆர்.திவங்க, ரி.சிவகுமார், ஏ.ஜெ. டனீசியஸ், ஏ.கிருத்திகன்,பி.கே. வணிகசேகர, ஏ.ஆர்.ரி.பிரியசாத், வை.விசாகேசன், யூ.ஜி. எச்.எம்.ஐ.எஸ் .பி.கேரத், ஐ.செந்தூரன், வி.பிரசாத், எஸ்.சௌதமினி, பி.வீரேந்திரன், ஜே.கே.எஸ்.உதேசிகா, எஸ்.ஹரிசுதன், என்.கஜானி, எஸ்.கருணதீபா, எம்.எச். ஸ்ரீஸ்கந்தராஜா, எஸ்.அருணந்திசிவம், வி.டயானா, எல்.டினுசா, பி.தேவதர்சினி ,எஸ்.பிரவீனா. எம்.பிரதீபன்,எஸ்.ஸ்ரீகுமார், என்.வசீகரன், ரி.அற்புதராஜா, பி.ஏ.ரி.என். பத்மபெரும,கே.கோபாலசுந்தரன்,பி.மஞ்சரேகா, எஸ்.சாகிராம். ஏ.கிருஷ்ணகுமார், எம்.லக்சாயினி, என்.பி.சி.ஜி.விஜயதிலக்க, எஸ். டிசாந்தி. ஜி.வி.ஆர்.சஞ்ஜீவ,பி.ஆறுமுகம், ஆர்.எல்.ரி. ராஜசிங்க.

எஸ். தாட்சாயினி, வி.விஜயமயோதினி, ரி.அபிராஜிதன், ரி.சிவமாறன், வி.சிந்துஜன், வி.ஹேமனில மியா,ரி.எதிர்மன்னசிங்கம், ரி.விபூசுதன், டபிள்யூ.ஏ.எஸ்.ஹர்சனா, எஸ்.கார்த்திகா, ஆர்.சௌமியா, ஆர்.எம்.ரி.கே. சித்தாராகா, யூ.டபிள்யூ.ரி.எஸ்.ராஜகருணா, எஸ்.என்.ரி.டி. சேனநாயக்க,ஜெ.மன்ஜீவன், வி.பிரசாத்,ஜெ.மதுரா,எஸ்.பிரியந்தி,என்.ஜே. ராஜகுமாரன்,ஜி.ஜே.நிரோஜன்,பி.நிரூபனா,ரி. ,கே.பி.வீரசேகர, எச்.எம்.பி. ஆர்.ஹேரத், எஸ்.கஜானி, சி.பிரதீபா, கே.சோபியா, ரி.கார்த்திகாயனி, பி.ஏ.என்.ரி. பாலசூர்ய, கே.ஜி.எம்.அபேயரத்னா.

பி.ஜி.ரி.என்.பி.ரத்நாயக்கே, ஜி.ரஜீத்,ஏ. அனுருத்தன், ஏ.டினேஸ், ஜி.கஜனன், ஆர்.தேவி,எஸ்.துவாரகா,வி.ஆர்.கஜேந்திரா, என்.சங்கர்,கே.கபிலா.

### விவசாய பீடம்

கே.ரவிராஜ்,வி.மகாதேவா,எஸ்.சுகன்யா, கே.அச்சுதன், கே.தர்ஷினி, எஸ்.பிரதீபன், எஸ்.சுகிர்தா, ரி.சுகன்யா, கே.றஜீதா, வி.சிவதர்சனி, கே. கஜீபன், எஸ்.சயந்திகா, எம். ரஞ்சித், எஸ்.ரகுபரன், கே.விக்னேஸ்வரி, பி. சத்தியசீலன், ரி.சசிகாந்த், ரி.செல்வரட்ணம், ரி.யாதவகுலசிங்கம், பி.கருணானந்தசோதி, ஏ.சிவகுமாரன், எஸ்.சாருஜன், ஜே.ஈழவேந்தன், கே.பிரசாத், எம். கென்மன்ஸ்றோய், பி.சுதன், எம். சிவசுப்பிரமணியம், கே. டல்சினி, எஸ்.சஞ்சீவன்,ரி.யாதவன்,எவ்.எல். எமர்சன், ரி.பாஸ்கரன், வி.கிருஷ்ணானந்தி ,என்.வடிவேலு,பி.நர்மதா,எம்.விஷ்ணுவர்த்தன் ,கே. சத்யகலா,ரி.முகுந்தன், ஜி.சுகந்தன், பி.நிறோஜினி,ச .ஆதிரையன், எம்.டி.பிரியதர்சினி, எஸ். செந்தூரன், ஜி.மகாலிங்கம், எஸ்.விஜயதீபன்,பி. விஜிதரன்,கே.சஜீவன், யு.அனுஷா, வி.சௌதினி, ஆர்.ரவிமர்மன், என்.சுகிதா, எஸ். நிமலன், கே.தனேசன்,ரி. சத்யேந்திரா, பி.கே.முத்துக்குமாரசாமி, கே. சுரேந்திரா, எஸ்.சுஹாசினி, பி.வாசுகி,என். யாதவன்,ரி. கவிராஜ்,எஸ். ஆர்.சயாமிலா, ரி.குகசாந்தினி,எஸ். சசிகலா,ரி.மகிஜா, என். ஜோசப்,கே.சுதர்சன்,யு.கதீஸ்வரன்.

### உயிரியல் விஞ்ஞானம்

எஸ்.லயந்தினி, எம்.வத்சலா, சீ.பார்த்தீபன், எஸ்.றனுஜா, எ. ஜெகநாதன்,கே.ராகுலன், எஸ்.ஏகநாதன், எஸ்.சிந்துஜா, வீ.நடராஜசுந்தரம்,எஸ்.ஆனந்தராஜா,கே.எஸ். கௌதமன்,எஸ்.ராதிகா,எஸ்.நீலாம்பரீ, ரீ.குலதீபன், டீ.எஸ்.டிகா மடுல்ல, ரீ.கனேந்திரன்,கே.கணபதிப்பிள்ளை, எஸ். சிறீவள்ளி, எ.எம்.சுகீந்திரன், எ.யூ.றொயிஸ்ரன், கே.சாண்டில்யன், பி.இந்திரகுமார் ,எஸ்.மகிந்தன், எஸ்.திவ்வியன், ரி. சித்தார்த், கே.பிரதீபா,எஸ்.கஜந்தி, ஜே.தில்லைநாதன், ரி. தர்மரத்தினம், ஆர்.கஸ்தூரி, எம்.ரஜீதன், பி.சுகிர்தன், எஸ்.குலராம், ஆர். கல்யாணி, எம்.சுபாங்கி, எம்.கோகிலன், எம். வசந்தகுமார், ஜே.எம்.ரி.நிக்கலஸ், எம்.உதயசூரியன்,எஸ்.பாலரஞ்சன், ஜி.குகஞ்சனா, எஸ்.துஷியந்தினி.

### கணனி விஞ்ஞானம்

ரி.கோபு,ஆர்.கோகுலவர்மன்,ரி.ஜங்கரன், எம்.கிருபன், ஆர்.றயூரன், எ. இபான்சி, வீ.நிஷாந்,எம்.அழகேந்திரன்,எஸ்.கிஷோகாந், வை.சஞ்சீவ்.

### பௌதீக விஞ்ஞானம்

எம்.சுதாகர், ஜி.எஸ்.பப்ரிஸ்ற், கே. சுதானந், ஆர்.ஜெகபரன், கே.வினோபா, கே.ஜெனகன், வை.கேசவன், வீ.தனஞ்சயன், எஸ்.துவாரகன், வி.தனுசன்,என்.கிருதிகா,ரி. சகாதேவன், ரி.வாகீசன், கே.ராகவன், வி.தர்சன்,ஜே.கௌசிகன்,எஸ்.சுரேஸ் குமார், ஆர்.கைலாஜினி,ரி.ஜெயகரன் ,ரி.சாளினி, எஸ்.ஜீவகநாதன், எஸ்.ஆரண்யா, ஜெ.ஜெனீதா,வி.காயத்திரி,ஜெ .நிரோஜா, கே.சுபாகர், ஆர்.நிருஜன், இ.ஜீவகாந்தன்.

எஸ்.துவாரகன், ரி.திரிபுவனேஸ்வரன், எஸ்.உமாதரன், பி.ஜசிந்தன்,எஸ்.ரம்மியா, பி.கணேஸ், எஸ்.சொலமன், ரி.சிவதர்சன், பி.கிருசாந்தினி, ரி. பிரவிந்தன், பி.மித்திரா, எஸ்.சிவகுமாரன், எஸ்.வித்தியதாசன், ஜி.தெய் வேந்திரன்,பி.கஜானன், எஸ்.சிவசொரூபி,கே.கஜரூபன், எஸ்.தாரணி, எஸ். அருண்நேரு,ஏ.பிரசன்னா,எம். ஜெய சுதாசன், எஸ்.கார்த்திகா.

எம். மகிலன், ரி.பிரசாந் தன்,எம்.எல். பனோசன், ரி.விஜயநாதன், ஐ.வத்சலன், ஐ.ஜெ.மரினோ, எஸ். கார்த்தி கன், எம்.மோகன்ராஜ்,ரி. நிசாளினி, எஸ்.ஞானானந்தா, ஏ.வினோத்,எஸ்.கீதகன்,

ஜெ.ஜெனார்த்தனன், கெ.ராகிலா, எம். கேதீஸ்வரன், எஸ்.நிதிலா, ஆர்.கனிஸ்ரா, எம்.கௌதமன், எஸ்.நிரோசன், ஆர்.ராகவமேனன், பி.எம்.ரி.பீரிஸ், ஜே.ரி.பீரிஸ், ஏ.மோரிசியாமளா, ஜி.பகீரதன், எஸ்.தேவராசா, கே.விஜயசுந்தரம், எஸ்.மதனகோபன், சி.சர்மிலன், ஆர்.ஜெரசாந்தன், எஸ்.ஜெயகாந்தன், பி.கிரிஷோக், பி.பிரணதீஸ், பி.கௌதமன், எஸ்.வாகீசன், ரி.தயானந்தி.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# எந்தக் காலத்திலும் அரசியலில் ஈடுபடும் திட்டமில்லை

## கூட்டுப்படைக் கட்டளைத் தளபதி சரத்பொன்சேகா தெரிவிப்பு



(கொழும்பு)

எந்தக் காலத்திலும் அரசியலில் ஈடுபடும் திட்டமில்லை என புதிய கூட்டுப்படைக் கட்டளைத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். தாம் அரசியலில் ஈடுபட்டால் லக்கி அல்கம மற்றும் ஜானக பெரேராவிற்கு நேர்ந்த நிலையே தமக்கும் நேரும் என அவர் குறிப்பிட்[illegible]யுத்த வெற்றிகளை இலகுபடுத்த அரசியல் தலைமைத்துவம் முக்கியத்துவமானது. அந்தத் தலைமைத்துவத்தை ஜனாதிபதி தலைமையிலான ஆளும் கட்சி சிறப்பாக வழங்கியதாக அவர் தெரிவித்துள்ளார்.

இராணுவத் தளபதி பதவியைத் துறந்தமை குறித்துத் தாம் கவலைப்படவில்லை எனவும், ஓர் பதவியை துறக்க நேரிடும் என தாம் அறிந்து வைத்திருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரபல சிங்கள இணையத்தளமொன்றுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியில் அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

சேவை மூப்பிற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டிருந்தால் ஒருபோதும் யுத்தத்தை வெற்றி கொண்டிருக்க முடியாது என சுட்டிக்காட்டியுள்ள அவர்,

திறமையாளர்களுக்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் எனவும்,வெறும் அனுபவத்தினால் இராணுவ வெற்றிகளை ஈட்ட முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் குமரன் பத்மநாதனை கைது செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், ஏற்கனவே நட்புறவு நாடுகளுக்கு இதுகுறித்து அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)

# முகாம்களில் உள்ள சிறுவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை இல்லை

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

இடைத்தங்கல் முகாம்களில் உள்ள சிறுவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் எவ்விதத் திட்டமும் இல்லை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மஹியங்கணையில் நடைபெற்ற படைவீரர் பாராட்டு விழாவில் கலந்துகொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

12,13 மற்றும் 14 வயதுடைய சிறுவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

மாறாக அவர்களுக்கு எதிராக நீதிமன்ற விசாரணைகளோ சட்ட நடவடிக்கையோ எடுப்பதில் அர்த்தமில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)

# முகத்துவாரத்தில் தேடுதல் பெண் உட்பட 6 பேர் கைது

## கொழும்பு பாதாள உலகக் கோஷ்டியினர் என சந்தேகிப்பதாக பொலிஸார் தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பு முகத்துவாரம் பகுதியில் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து நடத்திய திடீர் சுற்றிவளைப்புத் தேடுதலில் பெண்ணொருவர் உட்பட ஆறு பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். கொட்டாஞ்சேனை பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய பாதாள உலகக் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இவர்கள் அறுவரும் கைது செய்யப்பட்டனர் என்று கொட்டாஞ்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் அதிகாலை முகத்துவாரம் கதிரான வீடமைப்புத் திட்டத்திலுள்ள வீடொன்றைச் சுற்றிவளைத்த பொலிஸார் அங்கு மறைந்திருந்த நிலையில் இவர்கள் ஆறு பேரையும் கைது செய்தனர். பல்வேறு கொலை, கொள்ளை, போதைப் பொருள் வியாபாரம் மற்றும் கடத்தல் போன்ற குற்றச் செயல்களுடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் மேற்படி ஆறுபேரும் நீண்ட நாட்களாகவே பொலிஸாரால் தேடப்பட்டு வந்தவர்களாவர்.

கைது செய்யப்பட்டவர்கள் தற்போது கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு தீவிர விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருவதுடன் உரிய விசாரணைகளை அடுத்து அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஓ-6)



தென்புலோலி புற்றளை சித்திவிநாயகர் ஆலய மஹோற்சவ காலங்களில் தொடர்ச்சியாக கம்பராமாயணம் சொற்பொழிவாற்றிய பண்டிதர் பொன். சுகந்தன் "பல்கலை அரசு" என்னும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இந்நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதை படத்தில் காணலாம். (படம்: மருதங்கேணி நிருபர்)

# புத்தாண்டில் உங்கள் ஆடி மாதப் பலன்கள்

## தனுசு

(மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம் வரை)

**உதவி செய்வதன் மூலம் பிறர் உள்ளத்தில் இடம் பிடிக்கும் தனுசு ராசி நேயர்களே!**

ஆடி மாதக்கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, அஷ்டமத்தில் மூன்று கிரகங்கள் சஞ்சரித்தாலும், 12 க்கு அதிபதி செவ்வாய் 6-ல் சஞ்சரிப்பதால் பல வழிகளிலும் நன்மைகளே உங்களுக்கு வந்து சேரும். இப்படியிருக்குமோ, அப்படியிருக்குமோ என்று நினைத்த காரியங்கள் நல்லவிதமாக முடியும்.

சென்ற மாதத்தில் ஏற்பட்ட பிரச்சினைகளை எதிர்கொள்ள முடியாமல் தவித்த நீங்கள் இம் மாதம் இடையூறுகள் தானாகவே அகல்வது கண்டு ஆச்சரியப்படுவீர்கள். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். கீர்த்தி, புகழ் கூடும். வாட்டத்தைப் போக்க வள்ளல்கள் வழி காட்டுவர். தீட்டிய திட்டங்கள் வெற்றி பெற தித்திக்கும் வாழ்வு தரும் குருவை வழிபட்டு வாருங்கள். குருப்பெயர்ச்சிக்குப் பிறகு மாற்றங்கள் உருவாகும்.

மக்கள் போற்றும் அளவிற்கு செல்வாக்கைப் பெற்ற நீங்கள் சிக்கல்களிலிருந்து விடுபட, சிரமங்களிலிருந்து விடுபட தக்க விதத்தில் கிரகநிலைகள் உலாவருகின்றன.

ஜுலை 26 ஆம்திகதி மிதுன ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகி றார். உங்கள் ராசிக்கு அதிபதி குருவாகும். அதற்குப் பகைக்கி ரகமான சுக்ரன் உங்கள் ராசியைப் பார்க்கும் இந்த நேரத்தில் வரவைக் காட்டிலும் செலவு கூடலாம். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். ஆடை, ஆபரணங்கள் வாங்கி அழகு பார்ப்பீர்கள். பெண் வழிப் பிரச்சினைகள் அதிகரிக்கும். குலதெய் வழிபாட்டில் ஆர்வம் கூடும். கொடுக்கல், வாங்கல்கள் ஒழுங்காகும். குடும்பச் சுமை கூடினாலும், அதைச் சமாளிக்கும் ஆற்றல் பிறக்கும்.

ஜுலை 27 ஆம் திகதி சிம்ம ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். 7, 10 க்கு அதிபதி ஒன்பதில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில், எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி காண்பீர்கள். கொடுத்த வாக்கையும் காப்பாற்றுவீர்கள், கூட்டு முயற்சியிலிருந்து விலகி தனித்து இயங்கலாமா என்ற எண்ணம் மேலோங்கும். குடும்ப நலன் கருதி ஒரு சில முக்கிய முடிவெடுக்க நெருங்கிய நண்பர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள். பண வரவு திருப்தி தரும்.

உங்கள் ராசிநாதன் குரு மகர ராசியில் ஆகஸ்ட் 3 முதல் நீசம் பெறப் போகிறார். எனவே, ஆரோக்கியத்தில் அதிக அக்கறை காட்ட வேண்டிய சூழ்நிலை உருவாகலாம். வாகனப் பழுதுச் செலவுகள் அதிகரிக்கும். வாகனங்களில் செல்லும் பொழுது அதிக விழிப்புணர்ச்சி காட்டுவது நல்லது. பணம் வந்த மறு நிமிடமே பறந்து போகலாம். குணம் மாறாத நண்பர்களை இனம் கண்டு கொண்டு அனுசரித்துச் செல்வது நல்லது.

ஆகஸ்ட் 16 ஆம் திகதி மிதுன ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். 5,12 க்கு அதிபதி 7-ல் சஞ்சரிக்கும் பொழுது பிள்ளைகள் வழியில் நல்ல காரியம் நடை பெறும். பூர்வீக சொத்து தகராறு அகலும்.

இம்மாதம் இனிய மாதமாக அமைய குரு தெட்சிணாமூர்த்தி வழி பாட்டை மேற்கொள்ளுங்கள்.

## மகரம்

உத்தராடம் 2,3,4 பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 பாதம், வரை)

**நிதானத்தோடு செயற்பட்டால் நிச்சயம் வெற்றி கிடைக்கும் என்று நினைக்கும் மகர ராசி நேயர்களே!**

ஆடி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது அஷ்டமத்து சனியின் ஆதிக்கம் ஒரு புறமும், ஜென்ம ராகு, சப்தம கேது மறுபுறமும் சஞ்சரிப்பதால் வாழ்க்கைத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும். வருமானம் எவ்வளவு வந்தாலும் திருப்தி ஏற்படாது. கூடுதல் விரயங்களைச் சமாளிக்க என்ன செய்யலாம் என்று யோசிப்பீர்கள்.

இன்னும் சில மாதங்களில் சனி விலகப் போவதால் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. அதே நேரத்தில் குரு மீண்டும் உங்கள் ராசிக்கே வரப் போகிறார். வந்து நீசம் பெறுவதோடு, வக்ர கதி யிலும் இயங்கப் போகிறார். எனவே தற்காலிகமாக வெளியில் சென்றவர்கள் மீண்டும் பழைய இடத்திற்கே வந்திணைவர். குருப் பெயர்ச்சிக்குப் பிறகே உங்கள் ராசிக்கு நன்மைகள் வந்து சேரும் என்பதால் இப்பொழுதிலிருந்தே குரு வழிபாட்டையும் மேற்கொள் ளுங்கள். சனி வழிபாடும் மேற் கொண்டால் சஞ்சலங்கள் தீர்ந்து, சந்தோஷங்கள் அரங்கேறும்.

வாகன மாற்றங்கள் செய் யவும், வாடகை வீட்டில் மாற்றங்கள் செய்யவும் உகந்த மாதமிது. தேக நலனையும் ஒரு முறை சரி செய்து கொள்ளுங்கள். பக்கத்து கூட்டாளிகள் பகையாகாமல் பார்த் துக் கொள்ளுவது புத்திசாலித்தனமாகும். கருநிறக் காகம் ஏறும் சனிக்கு உரிய வழிபாடுகளைச் செய்து கவசம் பாடினால் உரிய பலன்கள் வந்து சேரும்.

ஜுலை 26 ஆம் திகதி மிதுன ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். 5, 10க்கு அதிபதி 6ல் சஞ்ச ரிக்கும் பொழுது சுப விரயங்கள் அதிகரிக்கும். உத்யோகத்தில் ஊதிய உயர்வு கிடைக்கும். பழைய கடன்களை தீர்க்க பதிய கடன்கள் வாங்கும் சூழ்நிலை ஒரு சிலருக்கு உருவாகலாம். அம்பிகை வழிபாடு இன்பம் வழங்கும்.

ஜுலை 27 ஆம் திகதி சிம்ம ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். 6 க்கு அதிபதி 8-ல் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் விபரீத ராஜயோகம் செயல்படப் போகிறது. திட்டமிடாது செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும். திறமை மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து உதவுவர். வீடு கட்டும் முயற்சிக்கு வித்திடுவீர்கள். விட்டுப் போன சொந்தங்கள் மீண்டும் வந்திணையும்.

ஆகஸ்ட் 3 ஆம் திகதி மகர ராசியில் குரு சஞ்சரித்து ஜென்ம குருவாக மாறுகிறார். ஜென்மத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது மனம் அலை பாயும். எந்தக் காரியத்தையும் இப்படிச் செய்யலாமா, அப்படிச் செய்யலாமா என்று சிந்திப்பீர்கள். வந்த விலைக்கு வாங்கிய இடத்தை விற்று விட்டுப் பிறகு வருத்தப் படுவீர்கள். வருமானம் முழுவதும் செலவாகலாம். சேமிப்பு என்பது ஏட்டில் இருக்குமே தவிர எதிரில் இருக்காது. எனவே இக்காலத்தில் குரு வழிபாடு அவசியம் தேவை. வழிபாட்டால் வளர்ச்சியைக் கூட்டிக் கொள்ள வேண்டிய நேரமிது.

ஆகஸ்ட் 16 ஆம் திகதி மிதுன த்தில் செவ்வாய் சஞ்சரிக்கும் பொழுது தாயின் உடல் நலத்தில் கவனம் தேவை. உடன் பிறப்புக்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்ள அனு சரித்துச்செல்வது நல்லது. அந்நிய தேசத்தில் இருந்து வரும் தகவல் ஆச்சரியப்பட வைக்கும்.

இம்மாதம் இனிய மாதமாக மலர சனிக்கிமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். (தொடரும்)

**சிவல்புரி சிங்காரம்**

# தமிழ் மொழியின் சிறப்பைச் செப்பிய பேராசிரியர் வ.ஐ.சுப்பிரமணியம்

**அண்மையில் காலமான தமிழகப் பேராசிரியர் வ.ஐ.சுப்பிரமணியம் அவர்கள் பற்றிய நினைவாக இக் கட்டுரை இங்கு பிரசுரமாகிறது. (ஆ-ர்)**

பேராசிரியர் வடசேரி ஐயம்பிள்ளை சுப்பிரமணியம் இவ்வுலகை விட்டு நீங்கிவிட்டார் என்னும் செய்தி தமிழியல் அறிஞர் உலகுக்கு மிகுந்த துயரமான செய்தியாகவே அமைந்தது. யாழ்பாணப் பல்கலைக்கழகம் அவருக்குக் கௌரவ D.Litt பட்டம் வழங்கிப் பெருமை பெற் றது. கேரளப் பல்கலைக்கழகத்திலே தன்னுடைய அறிவியல் பணியினைத் தொடங்கிய பேராசிரியர் சுப்பிரமணியம் தமிழ்நாடு தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக உயர்ந்து ஆந்திர- தமிழ் நாடு எல்லையில் அமைந்துள்ள குப்பத்தில் தொடங்கப்பட்ட திராவிடப் பல்கலைக்கழகத்தின் மேலதிக வேந்தராகப் பணி செய்தவர்.

மொழியியலாளராகிய அவர் அமெரிக்காவின் இந்தியானாப் பல்கலைக்கழகத்தில் மொழியியலில் முனைவர் பட்டம் பெற்றவர். சென்ற நூற்றாண்டின் நடுப் பகுதியிலிருந்து மொழியியலுலகில் தனியான இடம்பிடித்த நோம் சொம்ஸ்கி என்னும் மொழியியலாளனின் பிறப்பாக்க மாற்றமைப்பு இலக்கணக் கோட்பாட்டின் அடிப்படையில் முதன் முதலாக தமிழ் மொழி இலக்கணத்தை ஆராய்ந்து பேராசிரியர் சுப்பிரமணியம் இந்தியானாப் பல் கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றார்.

இந்தியத் திராவிட மொழியியலாளர் வரிசையிலே இவருக்கு சிறப்பான இடமுண்டு. திராவிட மொழியியல் கற்றல் கற்பித்தலையும் ஆய்வினையும் மேம்படுத்துவதற்காகத் திருவனந்தபுரத்திலே உலகத் திராவிட மொழியியல் நிறுவனம் ஒன்றினை கேரள அரசின் உதவியுடன் தொடங்கி தன்னுடைய இறுதி மூச்சு வரையும் அதன் கௌரவ இயக்குநராக இவர் பணி செய்தவர்.

இந்திய திராவிட மொழியியல் கழகத்தினை இயக்கி வந்தவர் இவரே. ஒவ்வோராண்டும் இந்திய மொழியியல் மாநாடு நடைபெறுவதற்கு முன்னின்று அயராது உழைத்தவர் .

1964 ஆம் ஆண்டு டெல்லியில் நடைபெற்ற கீழைத்தேய ஆய்வாளர் மாநாட்டிலே கூடிய தமிழியல் அறிஞர்கள் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் ஒன்றினை அமைப்பதற்கான ஒரு தீர்மானத்தினை நிறைவேற்றினர்.

இத் தீர்மானத்தை மேற்கொண்ட தமிழியல் அறிஞர்களான பேராசிரியர் ரி.பரோ, டாக்டர் ஷான் பிலியோசா, டாக்டர் ஆர்.இ.ஆஷர், வண. பிதா பேராசிரியர் தனிநாயகம் அடிகள், பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை, பண்டிதர் க.பொ. இரத்தினம் ஆகியோருடன் பேராசிரியர் சுப்பிரமணியமும் இணைந்துகொண்டார். பின்னர் உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் இணைச் செயலர்களுள் ஒருவராகப் பணி செய்தார்.

எங்களிலே மிகுந்த அன்பு கொண்டவர் நானும் மனோன்மணியும் திருவனந்தபுரம் செல்லும் பொழுதெல்லாம் உலகத் திராவிட மொழியியல் நிறுவனத்திலே நாங்கள் பங்கு பற்றி உரையாற்றக்கூடியதாக கருத்தரங்குகளை ஒழுங்கு செய்து தருவார். நாங்கள் பேராசிரியர் சிவலிங்கராசாவுடன் நாகர் கோயிலில் உள்ள அவருடைய வீட்டுக்குச் சென்ற போது பல சீர் செய்து எங்களை வரவேற்று உபசரித்த நாள் எம் கலங்கும் கண்ணினுள் தோன்றுகிறது.

இந்திய திராவிட மொழியியல் கழகத்தின் 25ஆவது வெள்ளி விழா மாநாட்டின் போது பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் உருவப் படம் அமைச்சர் தமிழ் குடிமகனால் திரை நீக்கம் செய்யப்பட்டது.

அவ்வேளை பேராசிரியர் கணபதிப்பிள்ளையை அறிமுகம் செய்து உரையாற்றும் வாய்ப்பினை எனக்கு பேராசிரியர் சுப்பிரமணியம் தந்தார் .இதேபோல் 27ஆவது மாநாட்டில் டாக்டர் பி.எஸ்.சுப்பிரமணிய சாஸ்திரியின் உருவப்படம் திரை நீக்கம் செய்யப்பட்ட போது அவரையும் அறிமுகம் செய்து உரையாற்றும் வாய்ப்பினை எனக்கு அவர் தந்தார்.

இந்திய திராவிட மொழியியல் அறிஞர்களுள் ஒரு தலை முறை அறிஞர் வரிசையில் இறுதியாக இருந்த ஒருவரும் போய்விட்டார். சென்ற ஆண்டு பேராசிரியர் அகஸ்திய லிங்கம் , பேராசிரியர் சுசுமுஓனோ எங்களை விட்டுப்பிரிந்தார்கள்; இந்த ஆண்டு பேராசிரியர் சுப்பிரமணியம். அவருடைய ஆன்மா இறைவனடி சேர்ந்து அமைதியுற்றிட எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ்
நிபுணத்துவ ஆலோசகர்நிலைப் பேராசிரியர்
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

# புலிகளின் சர்வதேச வலையமைப்பை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்

## ஐரோப்பிய ஒன்றியத்திடம் கோரிக்கை

(கொழும்பு)

புலிகள் இராணுவ ரீதியில் இலங்கையில் தோற்கடிக்கப்பட்டிருந்தாலும் அவர்களின் சர்வதேச வலையமைப்பு ஐரோப்பிய நாடுகளின் பலமாக இருப்பதாகவும் இந்த நிலைமையைக் கட்டுப்படுத்த ஐரோப்பிய ஒன்றியம் நடவடிக்கை எடுக்காவிட்டால் நிலைமை மோசமாகும் அபாயம் உள்ளது என்றும் இலங்கை தெரிவித்துள்ளது.

பெல்ஜியத்திற்கான இலங்கைத் தூதுவர் ரவிநாத ஆரியசிங்க, ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்ற உறுப்பினர்களிடம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற ஐரோப்பிய ஒன்றியப் பாராளுமன்றத் தேர்தலில் புலிகளுக்கு சார்பாக பிரசாரத்தில் ஈடுபட்ட வேட்பாளர்கள் தோல்வியுற்றதை சுட்டிக்காட்டியுள்ள பெல்ஜியத்திற்கான இலங்கைத் தூதுவர் ரவிநாத ஆரியசிங்க இதன் காரணமாக இலங்கையுடனான உறவை ஐரோப்பிய ஒன்றியம் மீள நிர்ணயிக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)

# ஷைவாலியர் விருது பெற்ற ஈழத்தின் தமிழ் பெண்மணி

## திருமதி. சிவயோகநாயகி இராமநாதன்

யாழ்ப்பாணத்தின் வடமராட்சி பிரதேசத்தில் திக்கம் என்ற அழகான கிராமத்தில் திரு. திருமதி செல்லையா பிள்ளையின் புதல்விகளுள் ஒருவராக 1937.09.04 இல் சிவயோகநாயகி பிறந்தார். இவர் தனது ஆரம்பக்கல்வியைத் திக்கத்திலுள்ள அமெரிக்கமிஷன் ஆரம்பப் பள்ளியிலும் உயர் கல்வியை பருத்தித்துறையில் உள்ள பிரபல பெண்கள் பாடசாலையான மெதடிஸ்த பெண்கள் பாடசாலையிலும் பயின்றார்.

தொடர்ந்து தனது பட்டப்படிப்பை இந்தியாவில் மேற்கொள்ள விரும்பி, கோயம்புத்தூரில் உள்ள ஸ்ரீ அவினாசிலிங்கம் மனையியல் விஞ்ஞானக் கல்லூரியில் சேர்ந்து 1963 ஆம் ஆண்டு இரண்டாம் வகுப்பில் (Second Class) தேறி விஞ்ஞானப் பட்டதாரி (B.Sc) ஆனார். ஆங்கில விரிவுரையாளராக இருந்த இராமநாதன் அவர்களுடன் தனது வாழ்க்கைப் பயணத்தை இணைத்துக் கொண்டார்.

1965 இல் பட்டதாரியாக வெளிவந்த சிவா என அழைக்கப்படும் சிவயோகநாயகி அவர்கள் மருதனார்மடத்திலுள்ள இராமநாதன் கல்லூரியில் தற்காலிக ஆசிரியராக நியமனம் பெற்றார். அதன் பின்னர் 1967 இல் கோப்பாயில் உள்ள அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பகுதி நேர விரிவுரையாளராக நியமிக்கப்படார். தொடர்ந்து மூன்று ஆண்டுகள் சேவையாற்றிய பின் 1970 இல் அங்கேயே விரிவுரையாளராக தரம் III இல் நியமிக்கப்பட்டு சேவையாற்றி வந்தார். இதன் பின்னர் அவர் 1972 ஆம் ஆண்டு அளுத்தம் அரசினர் ஆசிரியர் கலாசாலைக்கு விரிவுரையாளர் தரம் II ஆக பதவியுயர்வு பெற்று மாற்றலாகிச் சென்று தனது சேவையைத் தொடர்ந்து வந்தார்.

இவ்வாறு சேவையாற்றிவரும் காலத்தில் தான் இவரது வாழ்க்கையில் பெரிய ஒரு மாற்றம் ஏற்பட்டது. 1975 ஆம் ஆண்டு அவரது திறமையின் அடிப்படையில் இலங்கை அரசாங்கத்தின் புலமைப்பரிசில் பெற்று மேற்படிப்புக்காக பிரான்ஸ் சென்றார். அவ்வாண்டு டிசம்பர் மாதத்தில் அவர் பிரான்சிலிருந்து சென்று விச்சியில் (Vichy) உள்ள கல்வியம் (Calvium) என்னும் இடத்தில் பிரான்சிய மொழி பயின்றார். அதன் பின்னர் ஒக்ரோபர் 1976 முதல் செப்ரெம்பர் 1977 வரை பரிசில் உள்ள Boulevard Bessiers என்ற இடத்தில் Center de preparation என்ற கற்கை நெறியைக் கற்றார்.

1977 இல் இலங்கைக்கு திரும்ப வந்து தொடர்ந்தும் ஆசிரிய கலாசாலையில் தனது சேவையை ஆற்றிக் கொண்டிருந்த வேளை கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளுக்கு ஒரு வாரங்களுக்குள் இடமாற்றம் செய்யப்பட்டார்.

1979 இல் பிரெஞ்சுத் தூதரகத்தினால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு வருகை தரு விரிவுரையாளராக இவர் நியமிக்கப்பட்டமை இவரின் வாழ்க்கைப் பயணத்தில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியது. இவர் தொடர்ந்து 2004 ஆம் ஆண்டு வரை இருபத்தைந்து ஆண்டு காலங்கள் வரை பிரெஞ்சு மொழியை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கற்பித்து வந்தமைக்காக அப் பல்கலைக்கழக மொழியியல் ஆங்கிலத் துறையினரால் பாராட்டும் பெற்றார்.



பிரெஞ்சு நட்புறவுக்கழகத்தின் இணைப்பாளர், பிரெஞ்சு தூதுவர், திருமதி. இராமநாதன் விருது பெற்ற பின்னர் எடுத்த படம்.

இக்கால கட்டத்தில் பிரெஞ்சு அரசாங்கத்தினரால் நடாத்தப்படும் பிரெஞ்சு நட்புறவுக் கழகப் பொறுப்பதிகாரியாக இருந்த குலேந்திரன் 1979 இல் இக்கழகத்திலிருந்து விலகி பிரான்ஸ்சிற்கு சென்ற போது அதன் பொறுப்பை ஏற்ற புதிய அதிகாரியான இராஜலிங்கம் அவர்கள் இவரது சேவையை நாடினார்கள். அக்காலங்களில் பிரெஞ்சு நட்புறவுக்கழகத்தில் மொழி கற்பித்த ஒரேயொரு ஆசிரியர் என்ற பெருமையும் இவரையே சாரும்.

இடையிடையே நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளின் போது இவர் தனது சேவையைத் தொடர்ந்து 2004 ஆம் ஆண்டு வரை ஆற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. தற் போது பிரெஞ்சு நட்புறவுக்கழகத் தின் பொறுப்பா ளர் கலாநிதி ஜெரா ல்ட் றொபுச்சன் (Dr. Gerald Robus han) அவர்கள் யாழ் பல்கலைக்க ழகத்தில் மொழியியல் ஆங்கிலத் துறையில் தொடர் ந்து பிரெஞ்சு மொழியை கற்பி த்து வருகின்றமைக்கு காரணம் இவரேயாவார்.

கோப்பாய் அரசினர் பயிற் சிக் கலாசாலையில் பிரதி அதிபராகவும், அதிபராகவும் இருந்து சேவை யாற்றி வரும் காலத்தில் 1996 இல் யாழ். வலயம் இரண்டில் கல்விப் பணிப்பாளராகவும் பணிபுரிந்து 1997 செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதி ஓய்வு பெற்றார்.

திருமதி. சிவயோகநாயகி இராமநாதனின் சேவைகள் அவருக்கு வாழ்க்கையில் பல அநுபவங்களை வெவ்வேறு இடங்களில் கற்றுத் தந்துள்ளன. குறிப்பாக பிரெஞ்சு அரசாங்கம் அவருக்கு ஆற்றிய உதவிகள் பல. அவர் பிரான்சில் மொழியும் பண்பாடும் கற்றார். அவர் பெற்ற அனுபவங்கள் அவருக்கு அறிவை மட்டும் கற்றுக் கொடுக்கவில்லை. அவர் தனது வாழ்க்கையைச் சுதந்திரமாக வாழ்ந்து! காட்டவும் கற்றுக் கொடுத்தது.

திருமதி இராமநாதன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பிரெஞ்சு மொழியைக் கற்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட போது மிகவும் மகிழ்ச்சியடைந்தார். ஏனெனில் பிரெஞ்சு மொழியுடனான தொடர்பைத் தொடர்ந்து பேண இந் நியமனம் அவருக்கு உதவியது.

மொழியைக் கற்பது என்பது வெறுமனே வாழ்க்கையை வளப்படுத்தும் என்ற நோக்கத்திற்காக மட்டுமல்ல. அதற்கும் மேலாக ஏனைய தேசத்தவர்களுடன் பழகுவதற்கும் ஒன்றாக இருப்பதற்கும் அவர்களுடைய பண்பாட்டை அறிவதற்கும் வாய்ப்பாக அமைகின்றது.

பிரெஞ்சு மொழியானது ஓர் இசைமொழி. அந்நாட்டு மக்கள் மிகுந்த தேசப்பற்றுடையவர்கள். அவர்களிடமிருந்து நாம் கற்றுக் கொள்ள நிறைய விடயங்கள் இருக்கின்றன. இன்று பிரெஞ்சு மொழியானது எல்லா நாட்டிலும் பேசப்படுவதுடன் எல்லா நாட்டவராலும் அங்கிகரிக்கவும் பட்டுள்ளது. இத்தகைய அனுபவ நிலைகளைப் பிரெஞ்சு மொழியைக் கற்பதன் மூலம் திருமதி. இராமநாதன் உணர்ந்து மகிழ்ச்சி அடைந்தார்.

இவ்வகையில் முதன் முதல் பிரான்சுக்கு செல்வதற்கான புலமைப்பரிசிலைப் பெற்ற யாழ்ப்பாணத்து பெண்மணி என்ற பெருமை திருமதி. இராமநாதனையே சாரும். அதுமட்டுமல்லாமல் பிரான்சிய அரசாங்கத்தினால் கல்விக்காக (Knighthood in the field of Education) வழங்கப்படும் ஷெவாலியர் விருதை (Chevalier des I'ordredes palmes academigues) முதன்முதலில் பெற்று கௌரவிக்கப்பட்ட இலங்கைப் பெண்மணி என்ற பெருமையும் இவர் பெற்றுக் கொள்கின்றார். பிரெஞ்சு மொழியைக் கற்பிப்பதில் இருபத்தைந்து வருடங்கள் பூர்த்தி செய்தமைக்காகவும் இவர் கௌரவிக்கப்பட்டார் என்றால் மிகையாகாது.

இத்தகைய பெரும் கௌரவத்தினால் யாழ்ப்பாண மண்ணுக்கும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கும் பெருமை சேர்த்து சிறப்பாக வடமராட்சிப் பிரதேசத்திலுள்ள பொலிகண்டிப் பிரதேசத்தின் திக்கம் என்ற கிராமத்திற்குப் பெருமை சேர்த்த திக்கம் செல்லையா பிள்ளையின் மகள் என்ற பேற்றையும் பெற்று எமக்கும் தனது குடும்பத்திற்கும் பெரும் கீர்த்தியை ஏற்படுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

**கலாநிதி சுபதினி ரமேஷ்**
தலைவர்
மொழியியல் ஆங்கிலத்துறை

## பாதாள உலகக் குழுவினரை ஆயுதங்களுடன் சரணடையுமாறு உத்தரவு



(கொழும்பு)

பாதாள உலகக் குழுவினரை ஆயுதங்களுடன் சரணடையுமாறு பாதுகாப்பு செயலாளர் கோதபாய ராஜபக்ஷ உத்தரவு பிறப்பித்துள்ளார். அருகில் இருக்கும் பொலிஸ் நிலையத்தில் ஆயுதங்களுடன் பாதாள உலகக் குழுவினர் சரணடைய வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

எந்தவொரு அரசியல் தலைவரும் பாதாள உலகக் குழுவினருடன் தொடர்புகளைப் பேணக் கூடாது எனவும் அவ்வாறு பேணுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

துறைமுகத்தில் தேயிலை ஏல விற்பனை நடைபெறும் போது கூட பாதாள உலகக் குழுவினர் லஞ்சம் பெற்றுக் கொள்வ்தாக தமக்கு தகவல் கிட்டியுள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

சில உயர் பொலிஸ் அதிகாரிகளும் பல்வேறு வழிகளில் கப்பம் கோரி வருவதாக குறிப்பிட்டுள்ள அவர் கப்பம் அல்லது லஞ்சம் பெற்றுக் கொள்ளும் பொலிஸ் அதிகாரிகள் குறித்து தகவல்களை வழங்குமாறு பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (ஓ-6)

## மஹோற்சவம்

திருநெல்வேலி தெற்கு (சிவன் கோவில்) நீலாயதாஷி சமேத காயா ரோகணேஸ்வரர் ஆலய அம்மன் மஹோற்சவம் கடந்த வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இவ் உற்சவத்தில் நாளை மறுநாள் வியாழக்கிழமை மாலை சப்பரத்திருவிழாவும் அடுத்த நாள் வெள்ளிக்கிழமை காலை இரதோற்சவமும் சனிக்கிழமை காலை ஆடிப் பூரத்தன்று காலை தீர்த்தோற்சவமும் மாலை கொடியிறக்கமும் இடம்பெறும். (ஓ

## நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்

### ஐ.தே.க.எம்.பி.சஜித் பிரேமதாச வலியுறுத்தல்

பாராளுமன்றத்துக்கு பதில் கூறக்கூடிய வகையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன் அந்த அதிகாரங்கள் வரையறுக்கப்பட வேண்டியதும் அவசியம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் அம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி அலுவலகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு பேசுகையிலேயே சஜித் பிரேமதாச எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு அவர் மேலும் கூறுகையில்,

இன்று நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையில் ஏற்றுக் கொள்ள முடியாத சில அம்சங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பது தெரிந்ததே. இந்த நிறைவேற்று அதிகாரங்களில் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும்.

அது மட்டுமல்லாது திருத்தங்கள் கொண்டு வரப்படுகின்ற போது அது பாராளுமன்றத்துக்கும் மக்களுக்கும் பதில் கூறக்கூடிய வகையில் மாற்றியமைக்கப்படுதல் அவசியமாகும். மாறாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்பதில் எனக்கு உடன்பாடு இல்லை.

இந்த கருத்துக்களையே நான் ஐக்கிய தேசியக்கட்சி செயற்குழுக் கூட்டத்தின் போது முன் வைத்தேன்.

ஆனாலும், எனது கருத்துக்கள் ஊடகங்களில் திரிபுபடுத்தப்பட்டுள்ளன. இன்றைய ஜனாதிபதியை தொடர்ந்தும் பதிவியில் வைத்திருக்க வேண்டும் என்ற அடிப்படையிலான கருத்துக்களை நான் ஒரு போதும் வெளியிட்டதில்லை. தேவையற்ற அதிகாரங்கள் நீக்கப்பட வேண்டும் என்பதே எனது யோசனையாகும் என்றார். (ஓ-6)

S.A. Chandrabavan (Publisher & Teacher) 077-3013062

# புலமைப் புலரி பப்ளிகேஷன் -கொழும்பு

மாணவர்களைபாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் ,மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமான

புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் தரம் 05 மாணவர்களுக்கு வழங்கப்படும்


# மாதிரிப் பரீட்சை -2009

நேரம் :-45 நிமிடம்
வினாப்பத்திரம் (I)
பெற்ற புள்ளி ( )


பரீட்சை இலக்கம் 09

எஸ்.ஏ.சந்திரபவன்

❄ 01ஆம் 02ஆம் வினாக்களில் முதலில் சில படங்கள் தரப்பட்டுள்ளன. ஒன்றுடன் ஒன்று ஏதோ ஒரு வகையில் ஒற்றுமைப்படும் இரண்டு படங்களையும் கொண்ட விடை எது?


01. 


1. B யும் Dயும் 2. A யும் Dயும் 3. C யும் Eயும்

02. 


1. A யும் Cயும் 2. B யும் Dயும் 3. C யும் Fயும்

❄ 03ஆம் 4ஆம் வினாக்களில் தரப்பட்ட வடிவங்களில் சற்று வித்தியாசமானதன் கீழ் கோடிடுக.

03. 

04. 

❄ A,B ஆகிய இரு படங்களையும் அவதானித்து 05ஆம் 06ஆம் வினாக்களுக்கு விடை தருக.

A 

B 

05. காட்சி A யில் உள்ள ஒரு அம்சம் B யில் நீக்கப்பட்டுள்ளது.அப்பொருள் எது?

1.சூரியன் 2.சந்திரன் 3.வானம்


06.காட்சி Bயில் A யில் இல்லாத ஒரு புதிய அம்சம் சேர்க்கப்பட்டுள்ளது. அது யாது?

1.சூரியன் 2.சந்திரன் 3.மரம்

07.மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த இளங்கீரன் திடீரென மயக்கமுற்று நிலத்தில் வீழ்ந்தான். அவனுக்கு அவ்வாறு மயக்கம் ஏற்பட்டமைக்கான காரணமாக இருக்கக் கூடியது எது?

1.காலையில் சாப்பிடாமை
2.உடல் பலவீனமாக இருந்தமை
3.மயக்க மருந்தை உட்கொண்டிருந்தமை.

❄ கீழே தரப்பட்டுள்ள நான்கு படங்களையும் அவதானித்து 08 தொடக்கம் 11வரையான வினாக்களின் சரியான விடையின் கீழ் கோடிடுக.




08. A யில் உள்ள எந்தவொரு படத்துடனும் தொடர்புபடாத சொல் இருப்பது.

1.படம் B யில் 2.படம் C யில் 3.படம் D யில்

09. *B யில் உள்ள ஒரு படமும், (....?....) யில் உள்ள ஒரு சொல்லும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவை*

மேலுள்ள கூற்றில் (...?....) இக்குறியிடப்பட்ட இடைவெளியில் வரவேண்டிய ஆங்கில எழுத்து எதுவெனத் தெரிவு செய்க.

1. A 2. C 3.D

10.  கரையும் என்பது போல, (............Z.............).

மேலுள்ள கூற்றில் Z என்னும் இடைவெளிக்குப் பொருத்தமான விடை கீழ் வருவனவற்றுள் எது?

1) காகம் ,  2)  , சீறும் 3)  , சீறும்

11. கீழுள்ள உருச்சோடிகளில் மிகவும் வேறுபட்டு நிற்கும் உருச் சோடியைக் கொண்ட விடை எது?

1)  2)  3) 

❄ சுதாஸ்கரன் எனும் மாணவன் தான் கல்வியில் முழுமையாக அக்கறை காட்ட முடியாமைக்கு பின்வரும் காரணங்களைக் கூறினான்.

A- வீட்டில் எந்நேரமும் தொலைக்காட்சி இயங்கிக் கொண்டிருத்தல்
B- அம்மாவும் அப்பாவும் அடிக்கடி சண்டை பிடித்தல்
C- அம்மா எந்நேரமும் படிக்குமாறு அறிவுறுத்திக் கொண்டிருத்தல்
D- நான் அநேகமான நேரங்களில் பசியுடனேயே இருத்தல்
E- எனது அண்ணா எனக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தல்

12.அவன் கூறிய காரணங்களில் பொருத்தமற்ற காரணங்கள் என நீா் எவற்றைக் கருதுகிறீா்?

1.A யும் C யும். 2. Cயும் E யும் 3. A யும் Dயும்

13.சுதாஸ்கரனின் இந் நிலைமையைச் சரிசெய்வதற்கு ஒரு ஆசிரியர் செய்யக் கூடிய செயற்பாடு பின்வருவனவற்றுள் எதுவாக இருக்கும்?

1.பெற்றோருக்கு இடையிலான சண்டையைத் தீர்த்து வைத்தல்
2.தொலைக்காட்சியை விற்று விடுமாறு பெற்றோருக்கு அறிவுறுத்தல்
3.பிள்ளையின் கல்விக்குத் தேவையான ஆதரவை வழங்குமாறு பெற்றோருக்கு அறிவுறுத்தல்

14.'**அழுத பிள்ளை பால் குடிக்கும்**' எனும் பழமொழியின் கருத்தாக அமைவது எது?

1.பிள்ளை அழுதால் பால் கொடுக்க வேண்டும்.
2.எடுத்த முயற்சிக்கு எப்போதும் பலன் கிட்டும்.
3.பிள்ளை அழாமல் பால் குடிக்க முடியாது.


15. '**தீமை செய்தவன் தீமையினையும் நன்மை செய்தவன் நன்மையினையும் பெறுவான்**' இக்கருத்தை விளக்கப் பொருத்தமான பழமொழி யாது?


1.நல்ல மாட்டுக்கு ஒரு சூடு, நல்ல பிள்ளைக்கு ஒரு சொல்லு.
2.சூடு கண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது.
3.தினை விதைத்தவன் தினை அறுப்பான்,வினை விதைத்தவன் வினை அறுப்பான்

16.கீழுள்ள கூற்றுக்களில் பிழையான கருத்தினைக் கொண்ட கூற்று எதுவாகும்?


1.நான்கு கால்களையுடைய செல்லப்பிராணிகளில் நாயும் ஒன்று
2.இரண்டு கால்களையுடைய வளர்ப்பு பிராணிகளில் முயலும் ஒன்று
3.முட்டையிடும் பறவைகளில் குயிலும் ஒன்று

❄ 17ஆம் 18 ஆம் வினாக்களில் ஒரு பொருளினை மேலிருந்து நோக்கும்போது தோன்றும் விதம் முதலில் தரப்பட்டுள்ளது. அவ்வாறு நோக்கப்பட்ட பொருட்தொகுதியைத் தெரிவு செய்க.

17. 

18. 


19. கீழே சில மரக்குற்றிகள் அடுக்கப்பட்டுள்ளன. அவ்வடுக்கினை மேலிருந்து அவதானிக்கும் போது தோன்றும் வடிவத்தைத் தெரிவு செய்க.




20. கீழே முதலில் ஒரு சதுர வடிவக் கடதாசி நான்காக மடிக்கப்பட்டு ஒரு வடிவம் வெட்டப்பட்டுள்ளது. அதனை மீண்டும் விரித்தால் தோன்றும் வடிவம் எதுவாக இருக்கும்?




21. கீழே முதலில் வட்ட வடிவக் கோலமொன்று தரப்பட்டுள்ளது. எதிரே ஒரு வட்டத்தை நான்காக மடித்து வடிவம் வெட்டப்பட்டுள்ள விதம் காட்டப் பட்டுள்ளது. முதலில் உள்ள கோலம் வெட்டி எடுக்கப்பட்ட விதம் எதுவாகும்?




❊ கீழுள்ள பிரசினங்களை விளங்கி 22 ஆம் 23 ஆம் வினாக்களுக்கு விடை தருக.





22. △ இதன் பெறுமதி யாது?
(-----------------------------)

23. (?) வினாக்குறியிடப்பட்டுள்ள புள்ளிக்கோட்டில் வரவேண்டிய கூட்டுத்தொகை யாது?
(-----------------------------)

❊ கீழுள்ள சொற் சக்கரத்தை அவதானித்து 24 ஆம் 25 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

24.





'ப' எனும் எழுத்தை சக்கரத்தின் நடுவில் இட்டால் ஆக்கக் கூடிய சொற்கள் இரண்டையும் எழுதுக.
(-----------------------------) (------------------)


25. 'ம' எனும் எழுத்தை சக்கரத்தின் நடுவில் இட்டால் ஆக்கக் கூடிய சொற்கள் இரண்டையும் எழுதுக.
(-----------------------------) (--------------------------)

❊ கீழுள்ள 26ஆம், 27ஆம் வினாக்களில் உருக்கோலத்தில் வெற்றிடமாகக் காணப்படும் புகுதியில் வரவேண்டிய உருவினை எதிரேயுள்ள உருக்களிலிருந்து தெரிவு செய்க.

26.




27





❊ 28 -30 வரையான வினாக்களின் சரியான விடையின் கீழ் கோடிடுக.

28. க ச த ப ம வ இவ் எழுத்துக்களின் அடிப்படையில் கீழ்வரும் சொற்கோலத்தில் அடுத்துவரும் கோலத்தைத் தெரிவு செய்க.

| கடகட - வடவட → சடசட - மடமட → .......?........... |
|---|

1. தடபட-தடபட 2. தடதட-படபட 3. படபட-தடதட

29. ஆங்கில எழுத்துக்களின் கோல அமைப்பினை அவதானித்து, அடுத்து வரும் எழுத்தைத் தெரிவு செய்க.





1. W 2. U 3. V

❊ 30 ஆம் வினா தொடக்கம் 34 ஆம் வினா வரை மிகச் சரியான விடையைத் தெரிவு செய்து அடிக் கோடிடுக.

30. சுலோசனாவின் நண்பி கார்த்திகா. கார்த்திகாவின் நண்பன் சபேசன். மேலுள்ள கூற்றின்படி நாம் கூறக் கூடியது யாது?
1. சுலோசனாவுக்கும் சபேசன் நண்பன் ஆவான்.
2. சுலோசனாவும் சபேசனும் நண்பர்கள் அல்லர்.
3. சுலோசனாவும் சபேசனும் கார்த்திகாவின் நண்பர்கள்.

31.




இவ்விளக்க வரிப்படத்தின்படி சரியான கூற்று எது?
1. சிவப்பு நிறத்தை விரும்புபவர்கள் 4 பேர் மட்டுமே.
2. மஞ்சள் நிறத்தை மட்டும் விரும்புபவர்கள் 7 பேர்
3. 5 பேர் எந்த நிறத்தையும் விரும்பவில்லை


32. சாரங்கன் எனும் மாணவன் எப்பொழுதும் சுறுசுறுப்பாக இருப்பான். படிக்கும் நேரத்தில் விளையாட்டை விரும்பமாட்டான். எந்த நேரமும் ஏதாவது ஒரு செயலில் ஈடுபட்டுக் கொண்டே இருப்பான். இத்தகவல்களின்படி நாம் கூறக் கூடியது யாது?
1. சாரங்கன் ஒழுக்கம் உள்ள மாணவன்
2. சாரங்கன் படிப்பில் கெட்டிக்காரன்
3. சாரங்கனுக்கு விளையாட்டு என்பது பிடிக்காது.

33. இயாஸின் வீட்டிலிருந்து ரகுமானின் வீட்டுக்குச் செல்லும் வழியில் அமீனின் வீடு உள்ளது.

இக் கூற்றின்படி கீழ்வரும் கூற்றுக்களில் பிழையான கூற்று எது?
1. அமீனின் வீட்டைக் கடந்தே இயாஸ் ரகுமானிடம் செல்ல வேண்டும்.
2. அமீன் இயாஸிடம் செல்வதாயின் ரகுமானின் வீட்டுப் பக்கம் செல்லத் தேவையில்லை.
3. ரகுமான் இயாஸின் வீட்டைக் கடந்தே அமீனிடம் செல்ல வேண்டும்.

34. டேவிட் வெளிநாடு செல்வதற்காக புகையிரத நிலையத்திற்குச் சென்றான். ஆனால் அவன் வெளிநாடு செல்ல முடியாமல் திரும்பி வந்துவிட்டான். இதற்கான முக்கிய காரணமாக அமைவது எது?
1. அவன் பணத்தை எடுத்துச் செல்லவில்லை
2. அவன் இடம் மாறிச் சென்றமை
3. அவன் போவதற்குள் புகையிரதம் புறப்பட்டு விட்டது.

❊ 35-40 வரையான வினாக்களுக்கு உரிய விடைகளைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.




35. அதிகம் கவனமெடுத்துப் படிக்க வேண்டியவர் யார்?
(--------------------------------------------------------------)

36. குறைந்தளவு புள்ளி வித்தியாசத்தைக் கொண்ட மாணவர்கள் இருவரும் யாவர்?
(--------------------------------------------------------------)

| | | |
|---|---|---|
| த | ம் | மா |
| ளி | தா | ள |
| த் | கை | ல |

37. இவ் எழுத்துக்களிலிருந்து இலங்கையிலுள்ள ஒரு பிரசித்தி பெற்ற வணக்கத்தலத்தின் பெயரை எழுதுக.
(--------------------------------------------------------------)

38. இவ்வெழுத்துக்களிலிருந்து ஓர் இசைக்கருவியின் பெயரை எழுதுக.
(--------------------------------------------------------------)

❊ வெளிநாட்டில் வேலை பார்க்கும் ஜீவன் ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை இலங்கைக்கு வந்து செல்வான். இதன்படி 2009 ஜனவரியில் இலங்கைக்கு வந்த ஜீவன் மீண்டும் யூலை மாதத்தில் வருவதாகக் கூறினான்.

39. மேலுள்ள தகவல்களின்படி ஜீவன் ஒரு வருடத்தில் எத்தனை தடவைகள் இலங்கைக்கு வருவான்?
(--------------------------------------------------------------)

40. மேலுள்ள தகவல்களின்படி யூலை மாதம் இலங்கைக்கு வந்த ஜீவன் அதன் பின் எந்த மாதம் வருவான்?
(--------------------------------------------------------------)

## வினாத்தாள் 01 இன் விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. 2 | 2. 3 | 3. 2 | 4. 1 | 5. 3 | 6. 2 | 7. 1 | 8. 2 | 9. 3 | 10. 2 |
| 11. 1 | 12. 3 | 13. 1 | 14. 3 | 15.2 | 16.1 | 17.2 | 18.3 | 19.3 | 20.1 |
| 21.3 | 22. 2 | 23.1 | 24.2 | 25.3 | 26.1 | 27.2 | 28.1 | 29.2 | 30.1 |
| 31.3 | 32.2 | 33.3 | 34.3 | 35.1 | 36.2 | 37.1 | 38.18 | 39.30.00 | 40.2 |

# சுந்தர்சன் மானிப்பாய்




ஆச்சரியப்படத்தக்க விலைக்குறைப்புடன் சகல விதமான மின்சார உபகரணங்களை மொத்த மாகவும் சில்லறையாகவும் எமது ஸ்தாபனத்தில் பெற்றுக்கொள்ளலாம். விசேடமாக வரவழைக்கப்பட்ட அதிநவீன கண்கவர் மொடல்களில் தொங்கும் லைற்றுகள் (Chandilier) , சுவர்லைற்றுகள் (wall fittings) ஆகியன குறைக்கப்பட்ட விலையில் விரும்பியவாறு தெரிவு செய்து பெற்றுக்கொள்ளலாம்.




மேலும் !

- ANTON P.V.C Products-அன்ரன் பி.வீ.சி. தயாரிப்புகளின் யாழ்.குடாவின் ஏகவிநியோகஸ்தர்கள்!
- KELANI CABLES -களனி கேபிள்ஸ் தயாரிப்பு வயர் (wires) வகைளின் யாழ்.குடாவின் ஏக விநியோகஸ்தர்கள்!
- KEVILTON Electrical products-கெவில்ரன் எலெக்ரிகல் தயாரிப்புகளான சுவிச் வகைகள், MCB வகைகள், சக்தி சேமிப்பு மின்குமிழ்கள் போன்றவற்றின் யாழ். குடாவின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்!
- ABANS - அபான்ஸ்- தயாரிப்புகளான L.G.T.V (L.G.ரிவி) L.G குளிர்சாதனப் பெட்டிகள், சலவை இயந்திரங்கள், C.D/D.V.D பிளேயர்கள் போன்றவையின் யாழ்.குடாவின் அங்கீகரிக்கப்பட்ட முகவர் !
- Orange Electrical products- ஒறேன்ஞ் தயாரிப்புகளான சுவிச் வகைகள், MCB வகைக்ள், மின்குமிழ்கள் போன்றவையின் யாழ். குடாநாட்டின் அங்கீகரிக்கப்பட்ட முகவர் !
- Orbit star Electrical products -ஓபிற் ஸ்ரார் மின் சாதனங்களான றைஸ்குக்கர்கள் (Rice Cookers), மின் கேத்தில்கள் (Electric kettles), மின் அழுத்திகள் (Iron Box), சாஜர் ரோச் லைற்றுகள் (Charger Torch Lights), Air Pot சுடுநீர் போத்தல்கள் போன்ற "ஓபிற் ஸ்ரார்" தயாரிப்புகளை மொத்தமாகவும், சில்லறையாகவும் குறைக்கப்பட்ட விலையில் பெற்றுக்கொள்ளலாம்.




மேல்குறிப்பிட்ட நிறுவனங்களின் தயாரிப்புகள் யாவும் புதிய விலைக்குறைப்புடன் விற்பனை செய்யப்படுகின்றன.

இன்னும் பலரக மின்சாரத்தில் இயங்கும் அழகான பரிசுப் பொருட்களை நீங்கள் விரும்பியவாறு எமது காட்சி அறையில் தெரிவு செய்து பெற்றுக்கொள்ளலாம்.

அன்பளிப்பு வழங்க விரும்புபவர்கள், அன்பளிப்பைப் பெறுபவர்கள் தமக்கு விரும்பிய பொருட்களைத் தெரிவுசெய்து பெற்றுக் கொள்ள "அன்பளிப்பு வவுச்சர்" (GIFT VOUCHER) முறை ஒன்று எமது ஸ்தாபனத்தில் வாடிக்கையாளர்களின் நன்மை கருதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எமது அன்பார்ந்த வாடிக்கையாளர்களே, வியாபாரிகளே, மின் இணைப்பாளர்களே உங்கள் தேவையை பூர்த்தி செய்ய ஒரே கூரையின் கீழ் நியாயமான விலையில் மின்சாரப் பொருட்கள், நீர் வழங்கு பொருட்கள் யாவையும் பெற்றுக்கொள்ளும் அதேவேளை, தாங்கள் கடந்த காலங்களில் எமக்களித்த ஒத்துழைப்பை தொடர்ந்தும் வழங்குவீர்கள் என அன்புடன் எதிர்பார்க்கின்றோம்.

**விசேட குறிப்பு: வாடிக்கையாளர்களின் அன்பு வேண்டுகைக்கமைவாக எமது ஸ்தாபனம் மாலை 7.00 மணி வரை வியாபாரத்திற்காக திறந்திருக்கும் என்பதை அறியத் தருகின்றோம். அத்துடன் குறித்த தொகைக்கு மேலாக பொருட்கள் கொள்முதல் செய்பவர்களின் இடத்திற்கு அப் பொருட்கள் சேர்க்கப்படும்.**






"உண்மை அறிய ஒரு முறை எமது காட்சி அறைக்கு வாருங்கள்"

## "சுந்தர்சன்"

## யாழ்.வீதி, மானிப்பாய்




# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

## அடிமைச்சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை

98

மாசாய் இனக்குழு,கென்யாவிலும் வடக்குத் தான்சானியாவிலும் வாழுகின்ற அரை நாடோடித் தொல்குடியாகும். இவர்களுடைய தனித்துவமான பழக்கவழங்கங்களும், ஆடையலங்காரங்களும் பெரும்பாலான வேட்டைக் காடுகளுக்கண்மையில் தங்கள் வாழ்விடங்களையமைத்திருந்ததினாலும், இவர்கள் உலகில் அதிகமாக அறியப்பட்ட இனக் குழுக்களில் ஒன்றாகியுள்ளன.

இவர்கள் 'மா' எனும் மொழியைத் தங்கள் தாய் மொழியாகக் கொண்டுள்ளனர். இவர்கள் கென்யாவினதும் ,தான்சானியாவினதும் தேசிய மொழிகளான சுவாஹிலி, ஆங்கிலம் ஆகிய மொழிகளைப் பயின்று வருகின்றனர். கென்யாவிலும் தான்சானியாவிலும் சேர்த்து அண்ணளவாக ஒன்பது இலட்சம் மாசாய் மக்கள் ஆபிரிக்காவில் வாழ்கின்றனர் எனலாம்.

கென்ய, தான்சானிய அரசாங்கங்கள் மாசாய் மக்களின் வாழ்க்கை முறைகளை மாற்றியமைக்கப் பாடுபட்டாலும், அவர்கள் தங்கள் பண்டைய வாழ்வாதாரங்களைக் கைவிடுவதாக இல்லை. அவர்கள் பாலைவனம் சார்ந்த பகுதிகளிலும் பரட்டையான பற்றைகள் வளரும் நிலப் பகுதிகளிலும் விவசாயம் செய்யும் வல்லமை பெற்றவர்கள்.

ஆகையினால் அவர்களின் வாழ்க்கை முறையை குழப்பாது விடுவதுதான் சிறந்த உபாயம் என (OXFAM) ஒக்ஸ்பாம் என்ற அரசசார்பற்ற நிறுவனம் கருதுகிறது.

மாசாய் மக்கள் ஆதியில் வடமேற்கு கென்யாவிலிருக்கும் கீழ் நைல்நதிப் பள்ளத்தாக்கில் வாழ்ந்து வந்தனர்.15ஆம் நூற்றாண்டளவில் தெற்கு நோக்கி குடிபெயரத் தொடங்கினர்.

வட கென்யாவிலிருந்து மத்திய தான்சானியா வரையும் விரிந்து கிடக்கும் பெரு நிலப் பரப்பில் குடியேறி 17-18 ஆம் நூற்றாண்டுகளுக்கிடையில் முழு நிலத்தையும் தமதாக்கிக் கொண்டனர்.



கென்யாவில் வசிக்கும் மாசாய் இன மக்கள்

காலப்போக்கில் அங்கிருந்த வேறு சுதேச இனக் குழுக்களைப் பலவந்தமாக வெளியேற்றிவிட்டார்கள். 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியளவில் மாசாய் இன மக்கள் வாழும் பகுதி மிகவும் பெரிய பரப்பளவை எட்டியது. அது (GREAT RIFT VALLEY) பெரிய பிளந்த பள்ளத்தாக்கு முழுவதையும் விழுங்கி மேலும் விஸ்தரித்து நின்றது.

ஆக்கிரமிப்பாளர்கள் ஈட்டிகளையும் கேடயங்களையும் பயன்படுத்தினர். எறிதட்டு எறிவதில் வல்லவர்களான அவர்களைக் கண்டு எதிரிகள் நடுங்கினா.100 மீற்றர் தூரத்துக்கு எறிந்து இலக்கைத் தாக்க அவர்களால் முடியும்.

மாசாய் போர் வீரர்கள் 1852-1857 ஆம்ஆண்டுகளுக்கிடையில் கென்யாவின் தென்கிழக்கு கரையோர நகரமாகிய மொம்பாசா வரைக்கும் படையெடுத்து தங்கள் ஆதிக்கத்துக்குட்படுத்தினர்.

இந்த விஸ்தரிப்பைத் தொடர்ந்து 1883-1902 ஆண்டுகளுக்கிடையில் தொற்று நோய் காரணமாக 90வீதம் மந்தைகளும் 50 வீதமான வனவிலங்குகளும் மடிந்தன. சின் னம்மை பரவியது. மழையின்மையால் மக்கள்பட்டினியால் வருந்தினர். பெண்களும் குழந்தைகளும் எலும்பும் தோலுமாகக் காட்சியளித்தனர். வீரர்கள் நடக்க சக்தியின்றித் தவழ்ந்தனர். வயோதிபர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர்.

கழுகுகள் மாசாய் மக்களை இழுத்துச் சென்றன. மூன்றில் இரண்டு வீதமான மாசாய் மக்கள் மடிந்தனர். 1904 ஆம் ஆண்டிலும் 1911 இலும் செய்து கொண்ட உடன் படிக்கையின்படி மாசாய் மக்களின் மண்ணில் 60 வீதம் அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்டு வெள்ளைக்காரர்களுக்கு பெரிய பண்ணைகள் அமைக்க வழங்கப்பட்டன.

### ஜம்பொன்

மேலும் பல [illegible]ங்கள் வனவிலங்குகளின் சரணாலயங்களாக மாற்றப்பட்டன.

மாசாய் இனக்குழு நாடோடி மந்தை மேய்ப்பவர்களாக வாழ்ந்தமையால், அரசாங்கங்கள், அவர்களை நவீன வாழ்வுக்குக் கொண்டு வர எடுத்த முயற்சிகளைப் புறந்தள்ளினர்.

(தொடரும்)

# குழந்தை முதல் முதியோர் வரை

# எவ் வயதினரையும் தாக்கும் சோரியாசிஸ்

மனிதனின் உடல் அழகுக்கு முக்கிய காரணமாக விளங்குவது தோல். அந்தத் தோலில் ஏதேனும் நோய் ஏற்பட்டால் அதனால் ஏற்படும் வேதனையைவிட மனதளவில் ஏற்படும் வேதனை அதிகம்.

எனவே தான் இன்று உடல் அலங்காரத்துக்கான பொருள்களில் அதிகமானவை மேல்புறத் தோலை அழகூட்டும் பொருள்களாக சந்தையில் அறிமுகமாகி வருகின்றன.

அப்படிப்பட்ட தோலில் பல்வேறு வகையான நோய்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு. "சோரியாசிஸ்" மிக அதிகமாக காணப்படும் தோல் நோய்களில் ஒன்று. மக்கள் தொகையில் 3 சதவீதம் பேர் இந்த நோயால் பாதிக்கப்படுகின்றனர்.





செதில் உதிர் நோய், யானைச்சொறி, நமட்டு சொறி, காளாஞ்சகப்படை என ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு பெயரில் சோரியாஸ் நோயைக் குறிப்பிடுவார்கள்.

பிறந்த குழந்தை முதல் முதியோர் வரை எந்த வயதினரையும் தாக்குவதாலும், மறைந்தாலும் திரும்பத் திரும்ப வந்து வாழ்நாள் முழுவதும் தொல்லை கொடுப்பதாலும் நிரந்தர குணம் தரும் என்று சொல்லும் அளவுக்கு மருந்துகள் இல்லாததாலும் இந்த நோய் தோல் நோய்களில் மிக முக்கியத்துவம் பெறுகிறது.

### நோயின் இயல்புகள்

தோலின் மேல்புறம் மென்மையான வெள்ளை நிறச் செதில்களால் மூடப்பட்ட சிவப்பு நிற தடிப்புகள் இந்த நோயின் முத்திரை. மேல் இருக்கும் செதில்களை ஒரு நாணயம் கொண்டு சுரண்டினால் ஆங்காங்கு சிறு ரத்தக் கசிவுகள் காணப்படும்.

இந்த நோயால் உச்சி முதல் உள்ளங்கால் வரை எந்தப் பகுதியும் பாதிக்கப்படலாம். இருப்பினும் முழங்கை, முழங்கால், உச்சந்தலை, முதுகின் அடிப்பகுதி, தொடை இடுக்கு போன்ற பகுதிகளில் அதிகமாக காணப்படும்.

### பொடுகு, பித்த வெடிப்பு

தலையில் பொடுகு ஏற்படுவது இயற்கை ; இதுவே கையில் தட்டுப்படும் அளவுக்கு திட்டுதிட்டாக உதிர்ந்தால் அது சோரியாசிஸ். கால்களின் ஓரங்களில் பித்த வெடிப்பு இருப்பது இயற்கை. அதுவே உள்ளங்கால்கள் வரை இருந்தால் அநேகமாக அது சோரியாசிஸ் ஆக இருக்கலாம்.

### நோயின் வகைகள்

அடிப்படையில் நோய் ஒன்றாயினும் வெவ்வேறு தோற்றங்களால் இந் நோய் பல வகைகளாகப் பிரிக்கப்படுகிறது. தடுப்பு வகை, துளி வகை, சீழ் வகை போன்றவை அவற்றில் சில.

இந்த நோயாளிகளில் சிலருக்கு நகங்கள் பாதிக்கப்படும். நகத்தில் சிறு குண்டூசியால் குத்தியது போன்ற சிறு பள்ளங்கள் காணப்படும். சிலருக்கு நகம் மேல் நோக்கி கிளம்பி வளைந்து தடித்துக் காணப்படும். இவர்களில் பலருக்கு நகங்கள் சிதல்களாக சேதமடையும்.

சோரியாசிஸ் நோயாளிகளில் 6 சதவீதத்தினர் மூட்டுவாதத்தால் பாதிக்கப்படுகின்றனர். இது ஒரு முடக்கு வாதம். கை விரல், கால் விரல், மூட்டுக்களில் வலி வீக்கம் கண்டு முடக்கப்படும். சில நேரங்களில் நோய் அதிகப்பட்டால் உடம்பு முழுவதும் தோல் வெடித்து நீர் கசிய ஆரம்பித்துவிடும். மருத்துவ பிழையினாலும் இது ஏற்படலாம். இந்நிலை உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும்.


### நோய்க்கான காரணம்

சரியான காரணம் இன்னும் அறியப்படவில்லை. எந்த வயதிலும் ஆண், பெண் இருபாலரிலும் ஏற்படலாம். ஒருமுறை தோன்றினால் வாழ்நாள் முழுவதும் இருக்க அல்லது மறைந்து போக வாய்ப்பு உண்டு. இது தொற்று நோய் அல்ல. பெற்றோரில் ஒருவருக்கு இருந்தால் அவரது குழந்தைக்கு ஏற்பட 30 சதவீத வாய்ப்பும், இருவரிடமும் இருந்தால் 60 சதவீத வாய்ப்பும் உண்டு.

### மருத்துவம்

நோய் ஒன்றாயினும் வகைகள் பல. எனவேதான் சாலிசிலேட் களிம்பு முதல் புற்று நோய்க்கு பயன்படுத்தப்படும் மீத்தோ டிரக்ஷேடேட் வரை நவீன மருத்துவத்தில் வகை கண்டு பயன்படுத்தப்படுகிறது. இருப்பினும் நிரந்தர குணம் தரும் என்ற மருந்து இதுவரை இல்லை.

சித்த மருத்துவம் இந் நோயைக் குணப்படுத்துவதில் மகத்தான அளவு சாதனை செய்து இருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது. இருப்பினும் ஒரு மருந்தையோ தைலத்தையோ குறிப்பிட்டு எல்லா வகையான சோரியாசிஸ் நோயையும் குணப்படுத்தலாம் எனக் கூறிவிட முடியாது.



சோரியாசிஸ் சித்த மருத்துவ சிகிச்சைக்குமுன்பு | சிகிச்சைக்குப் பின்பு

இத்தனை நாளில் குணப்படுத்தி விடுவேன் என்று கூறுவதும் இயலாது. நோயின் வகை அறிந்த மருந்துகளை மாற்றி மாற்றிக் கொடுக்கும் போது பலன் கிடைக்கிறது. புற்று நோய் மருந்துகளால் மட்டுமே இந்த நோய் கட்டுப்பாட்டுக்குள் இருந்த சில நோயாளிகளுக்கு, சித்த மருத்துவத்தால் நல்ல குணம் கிடைத்துள்ளது.


இந் நோய்க்கு சித்த மருத்துவத்தில் உள்பிரயோகமாக பயன்படுத்தப்படும் மருந்துகள், நவீன மருந்துகளைவிட பாதுகாப்பானவை என்று கூற இயலாது. சித்த மருத்துவ முறைப்படி ஒருமுறை குணப்படுத்திவிட்டால் மறுமுறை வர வெகு நாள்கள் ஆகிறது.




எனது அனுபவத்தில் கடந்த பல ஆண்டுகளில் குணம் பெற்ற யாருக்கும் இந் நோய் திரும்ப வரவில்லை என்பது சித்த மருத்துவத்தின் சிறப்பைக் காட்டுகிறது.

இந்நோயில் காணப்படும் மூட்டு வாதத்திற்கு சித்த மருத்துவ சிகிச்சை கொடுத்தால் விரல்களின் முடக்கத்தைத் தடுக்கலாம்.

# செல்வத்துள் சிறந்ததான செவிச் செல்வத்தை பாதுகாப்போம்




நம் உடலின் குறிப்பிடத்தக்க உறுப்புகளில் காதுகள் மிகவும் முக்கியமானவை. அதனால் தான் கற்றலில் கேட்டலே நன்று என்று கூறுகிறார்கள். மனிதர்கள் பொதுவாக 20 வயதை நெருங்கும்போது, காதுகளின் கேட்புத்திறன் மெல் மெல்லக்குறையத் தொடங்கும். அதற்காக முழுவதுமாக காதுகள் செயல் இழந்துவிடும் என்பதல்ல. அதிக ஓசையில் உணரப்படும் ஒலிகளே முதலில் குறைய ஆரம்பிக்கும். வயது முதிர்வால் ஏற்படும் இந்தக் கேட்புத்திறன் இழப்பு சாதாரணமானவையே.

காது கேளாமை குறைபாட்டிற்கு பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. காயம், நோய்வாய்ப்படுதல், பரம்பரை குறைபாடு போன்றவை இதில் அடங்கும். காதுகோளாமையை பிறவிச் செவிடு என்றும், பிறந்து சில காலத்திற்குப் பின்னர் ஏற்படும் செவிடை இடைப்பட்ட காலத்தில் ஏற்படும் செவிடு என்று வகைப்படுத்தலாம். பிறவியிலேயே செவிடாக இல்லாமல் பிற்காலத்தில் செவிடாவதற்கு பேரிரைச்சல் கூட ஒரு காரணமாக அமைய நேரிடுகிறது.

**காது கேளாமை பற்றி அறியும் முன் காதுகளின் பாகங்களைப் பற்றிப் பார்ப்போம்.**

### வெளிப்புற காது (Outer Ear)

இது நம் ஒவ்வொருவரிடத்திலும் பார்க்கக் கூடிய காது மடல்களை எடுத்துக் கொள்ளலாம். ஒலிகளை இவை வாங்கி உட்புறத்திற்கு குழாய் ஒன்றின் மூலமாக செவிப்பறைக்குக் கொண்டு செல்கிறது.

### நடுப்புற காது (Middle Ear)

நடுப்புறகாதில் 3 பிரிவுகள் காணப்படுகின்றன. செவிப்பறையின் வெளிப்பகுதி. இப்பகுதியில் 3 சிறு எலும்புகள் உள்ளன. சுத்தி, எலும்பு அல்லது மல்லியஸ், இன்கஸ் மற்றும் ஸ்டேப்ஸ் எனப்படுபவை. ஒலி அலைகள் ஏற்பட்டவுடன் செவிப்பறைகளின் அசைவிற்கேற்ப இந்த எலும்புகள் ஒலியை பெருக்கும் பணியை மேற்கொள்கின்றன.

நடுப்புற காதுடன் இணைக்கப்பட்டிருக்கும் ஒரு குழாய் தொண்டையின் பின்பகுதியில் சேர்ந்து ஒலி அலைகளால் உருவாகும் அல்லது வெளிப்படும் காற்றுக்கு ஏற்ப சமநிலையை ஏற்படுத்துகிறது.

### உட்புறக் காது (Inner Ear)

காக்ளியர் எனப்படும் சிறிய சுருள் குழாய் ஒன்றின் மூலமாக ஒலி அலைகள் உட்புறக் காதுகளில் பெறப்படுகின்றன. முடிகள் போன்ற நுண்ணிழைகள் காக்ளியரில் இருப்பதால் அவை தங்களுக்கு ஏற்படும் ஒலி அதிர்வை - தகவலை மின்காந்த துடிப்புகளுடன் குறுக்கிட்டு காக்ளியர் நரம்பு மூலமாக மூளைக்கு அனுப்பும் பணியை செய்கின்றன.

காதுகளில் இருக்கும் பகுதிகளிலேயே மிக மிக சென்சிட்வான அதேநேரத்தில் முக்கியமான பகுதி என்று காக்ளியரை கூறலாம். இவைதான் காதுகளில் காணப்படும் பகுதிகளாகும். தொடர்ந்து காது கேளாமல் செவிடாவதற்கான காரணங்களைப் பார்ப்போம்.

### பிறவிச் செவிடு

நடுப்புறக் காதில் இடம்பெறும் 3 சிறு எலும்புகள் இல்லாமலேயே குழந்தைகள் பிறக்குமானால் பிறவியிலேயே காது கேளாமை ஏற்படலாம்.

இதன் காரணமாக உட்புறக் காதுக்கு ஒலி அலைகள் அனுப்ப முடியாத சூழ்நிலை உருவாகும். மற்றொரு காரணம் ஒலி அதிர்வுகளுக்கு செவிப்பறையானது அதிராமல் போகலாம்.

உதாரணமாக செவியிலிருந்து சீழ் வடிவதால் செவிப்பறை செயல்பாடின்றி போவது ஒரு உதாரணம். பிறவியிலேயே செவிடாக இருப்பவர்கள் உரிய முறையில் சிகிச்சை எடுத்துக் கொண்டால் இயற்கையான கேட்புத் திறனைப் பெறுவதற்கான வாய்ப்புகள் 50 முதல் 60 சதவீதம் வரை உள்ளன.

### நரம்பு செவிடு


நோய், விபத்து அல்லது சில பாதிப்புகள் காரணமாக காக்ளியர் நரம்பு பாதிப்புக்குள்ளாகும் போது, செவிப்பறை அல்லது சிறு எலும்புகள் செயலாற்றும் வகையில் இருந்தாலும் மின் அதிர்வு அலைகள் மூளையை சென்றடைய முடியாத நிலையில் இது போன்ற நரம்பு செவிடு குறைபாடு ஏற்படும்.

வேறு சில பிரிவுகளில் மூளையிலேயே தகவல்களை பரிமாற்றிக்கொள்ள இயலாத குறைபாடு இருக்கலாம். இது போன்ற நரம்பு தொடர்பான குறைபாட்டிற்கு சிகிச்சை மூலம் பலன் ஏதும் இருக்காது என்பதே ஏறக்குறைய இதுவரை மருத்துவ ரீதியிலான உண்மை.

இதுபோன்ற சிகிச்சை முறைக்கு தற்கால நவீன சிகிச்சை முறைகள் ஏதும் உள்ளனவா என்பது பற்றி மருத்துவரை அணுகி அறிந்து கொள்ளலாம்.

(தொடரும்)

# பப்பாசி பழத்தின் பயன்கள்



பப்பாசி பழத்தை அடிக்கடி குழந்தைகளுக்கு கொடுத்து வந்தால் உடல் வளர்ச்சி துரிதமாகும். எலும்பு வளர்ச்சி, பல் உறுதி ஏற்படும்.

பப்பாசிக் காயை கூட்டாக செய்து உண் டால் பருமனான உடல் படிப்படியாக மெலியும்.

தொடர்ந்து பப்பாசிப் பழத்தை சாப்பிட்டு வர கல்லீரல் வீக்கம் குறையும்.

பப்பாசிப் பழத்தை தேனில் தோய்த்து உண்டு வர நரம்புத் தளர்ச்சி குறையும்.

நன்கு பழுத்த பழத்தை கூழாக பிசைந்து தேன் கலந்து முகத்தில் பூசி, ஊறிய பின் சுடுநீரால் கழுவி வர முகச்சுருக்கும் மாறி, முகம் அழகு பெறும்.

பப்பாசிக் காயின் பாலை வாய்ப்புண், புண்கள் மேல் பூச புண்கள் ஆறும்.

பப்பாசிப் பாலை, பசும்பாலுடன் கலந்து சேற்றுப் புண்கள் மேல் தடவி வர புண்கள் ஆறும்.

பப்பாசிப் பாலை குழந்தைகளின் தலையில் ஏற்படும் புண்களில் பூசி வர புண்கள் ஆறும்.

பப்பாசி இலைகளை அரைத்து கட்டி மேல் வைத்துக் கட்டினால் உடையும்.

பப்பாசி இலைகளை பிழிந்து எடுத்து வீக்கங்கள் மேல் பூசி வர வீக்கம் கரையும்.

பப்பாசி விதைகளை அரைத்து தேள் கொட்டிய இடத்தில் பூச வலி, விஷம் இறங்கும்.

பப்பாசிக் காய் குழம்பை, பிரசவித்த பெண்கள் சாதத்தில் சேர்த்து வர பால் சுரப்பு கூடும்.

மகிழ்ச்சியாக இருக்கும் நேரத்தில் குறுக்கே வந்து நிற்கும் முற்றுப்புள்ளி மனச்சாட்சி.

~ ஸ்ராலின்

வலம்புரி

# வடக்கு கிழக்கு இணைப்பை அறுத்து தொலைபேசி இணைப்புப் பெற்ற இன்பம்

இறைவனை சந்தித்து உலகில் அதிகம் பாவம் செய்தவர்கள் யார்? எனக் கேள்வி கேட்டால் சாட்சாத் ஈஸ்வரனின் பதில் ஈழத் தமிழர் என்பதாக இருக்கும்.

அந்தளவிற்கு அவர்களின் முயற்சிகள், பகடுகள் எல்லாம் அடிபட்டு போயின.

இலங்கை மண்ணில் அவர்கள் தமிழர்களாக பிறந்து பட்டதுன்ப துயரங்கள் ஏராளம். உயிரிழப்பு, சொத்தழிவு, பிறந்து வளர்ந்த மண்ணைவிட்டு விட்டகன்ற வேதனை என்ற பட்டியலுடன் உலகில் எக்காலத்திலும் நடந்தேறாத வன்னியுத்தம் தந்த மிக கொடூரமான சம்பவங்கள் தமிழ் இனத்தின் பழவினையை ஞாபகப் படுத்துகிறது.

இதனால் தான் உலகில் அதிக பாவம் செய்தவர்கள் ஈழத்தமிழர்கள் என்ற முடிபுக்கு நாம் வர முடிகிறது. இது ஒருபுறம்.

மறுபுறம் ஈழத்தமிழர்கள் அதிலும் குறிப்பாக வடபகுதி தமிழ்மக்கள் எதனையுமே உடனடியாக மறந்துவிடுவார்கள். அவர்களிடம் இருப்பதை பறிதெடுத்து பத்து மாதங்களில் திருப்பிக்கொடுத்தால் கூட அவர்கள் இதுவல்லவோ உரிமை என்று எண்ணிக் கொள்வார்கள்.

தங்கள் இழப்புகளை மறந்து– உறவுகள் முட்கம்பி வேலிக்குள் இந்த உலகையே தொலைத்துவிட்டு–பலியாகிவிட்ட தம் உறவுகளை நினைந்து நொந்து கண்ணீர் சொரிந்து கொண்டிருக்கும் போது, நாம் ஐஸ்கிறீம் குடித்து அகமகிழ்வோம்.

மற்றவர்க்காகத் துன்பப்படுத்தும் மானிடத் தன்மை நம்மில் மிகக் குறைவு என்பதை மன வருத்தத்துடன் ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

இல்லை என்றால் யாழ்ப்பாணம் இவ்வளவு வேகமாக வர்த்தக நகரமாக மாறியிருக்காது.

தொலைபேசி விற்பனைகள் வீதிக்குவீதி, சந்திக்கு சந்தி களைகட்டியிருக்க மாட்டாது.

இப்போதில்லாம் தொலைபேசிகளால் யாழ்ப்பாணம் சோடிக்கப்பட்டுள்ளது.

கையடக்கத் தொலைபேசி தொடக்கம் தரைவழி, வான்வழி, கடல்வழி என எல்லாவகைக் தொலைபேசிகளும் எங்களை ஆக்கிரமித்து ஆட்கொள்கிறது. ஆகா எத்துணை மகிழ்வு.

தீவிலிருந்து–வலி. வடக்கைவிட்டு–வன்னியை முழுமையாகத் தொலைத்து–வடக்குக் கிழக்கு இணைப்பை அறுத்து எடுத்த போதிலும், தொலைபேசி இணைப்பு கிடைத்த இன்பம் இது போதும்.

கதைத்து கதைத்து காலம்கழிப்போம். தமிழர் மானம் போனாலும் பரவாயில்லை.

# நம் மூதாதையர்க்கு நன்றிக் கடன் செய்யும் நன்னாள் ஆடி அமாவாசை

## இன்று ஆடி அமாவாசைத் தினம்

மாதாந்தோறும் வரும் அமாவாசைத் திதியும்,பௌர்ணமித் திதியும் எமது பிதா, மாதா வழியினரை மனதில் இருத்தி நன்றிக்கடன் செய்யும் விரத, தர்ப்பண ,வழிபாட்டு நாட்களாக எம் முன்னோர் வகுத்துள்ளனர். கிரகங்களிற் சூரியனை பிதாவாகவும் சந்திரனை மாதாவாகவும் சூரியனும் சந்திரனும் பூமிக்கு மேலாக ஒன்று பட்டுவரும் அமாவாசைத் திதி நாளை தந்தைக்கும் ,முழு நிலா நாளான பூரணைத் தினத்தை தாயாருக்கும் பிதிர்க்கடன் செய்து வழிபடும் சிறப்பு இந்துக்களுக்கே உரிய பாரம்பரியமாகும்.

இந்த விதத்திலே சூரியன் வட திசை நோக்கும் தை மாதத்தில் வரும் உத்தராயண அமாவாசையும் சூரியன் தென் திசை நோக்கும் தெட்சணாயனத்தில் ஆடி மாத அமாவாசையும் பிதிர் வழிபாட்டிற்குச் சிறப்புடையதாக போற்றப்படுகின்றன.

மேலும் வருடந்தோறும் வரும் ஆடி மாதம் பன்னிரு மாதங்களிலும் தனிச் சிறப்புடையதாக பீடமாதம் என உயர்ந்த நிலையில் வைத்து ஆடிப்பிறப்பு ,ஆடிச்செவ்வாய் , ஆடிவெள்ளி ,ஆடிப்பூரம் ,ஆடிக்கிருத்திகை ,ஆடிப்பூரணை ஆடிச் சுவாதி எனப் பல்வேறு சிறப்பான விரதங்களும் ,வழிபாடுகளும் அனுஷ்ரிக்கப்படுகின்றன.

ஆடி மாதத்திலே நம் முன்னோர் உயர் தொழிலாகிய பயிர்தொழிலை உழுது விதைத்து ஆரம்பிப்பார்கள். இதன் காரணமாகவே ஆடி உழவு கூடி உழுவீர் எனவும் ,ஆடி விதை தேடி நடு எனவும் , ஆடிப்பிறப்பிற்கு நாளை விடுதலை எனவும் இம் மாதத்தைச் சிறப்பித்தனர்.

ஆடி மாதம் இவ்விதமாக பல்வேறு சிறப்புக்களுக்குரியதாகவும்,தெட்சணாயன ஆரம்பமாகவும் ,மழைக்காலம் ஆரம்பமாவதாலும் ,பீடமாதம் என நம் முன்னோர் உயர்ந்த இடத்தில் வைத்துப் போற்றினர். இதன் சிறப்பை அறியாதோரே ஆடிப்பீடைபிடித்த மாதம் எனத் தவறாக கொள்கின்றார்கள்.

இன்று ஆடிப்பருவமழை பொய்த்தாலும் மற்றைய சிறப்புக்கள் வழிபாடுகள் யாவும் மக்களாலே கொண்டாடப்பட்டு வருகின்றது. தமிழகத்திலும் ஈழத்தின் மலையகப்பகுதிகளிலும் தமிழ் மக்கள் ஆடிப்பெருக்கு என பெருவிழாக்களை இம்மாதத்திலே கொண்டாடுவதைக்காணலாம்.

ஈழத்து தமிழ்ப்பெரும் புலவரும் நவாலியூர் தாத்தா என போற்றப்படுபவருமான நவாலி சோமசுந்தரப்புலவர் ஆடி மாதச் சிறப்பினை மிக அழகாக

ஆடிப்பிறப்பிற்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே
கூடிப்பனங்கட்டி கூழும் குடிக்கலாம்
கொளுக்கட்டை தின்னலாம் தோழர்களே

என விழித்துப்பாடி எல்லோரையும் அழைத்து ஆடிச் சிறப்பைக்கொண்டாட வைப்பது ஆடி மாதத்தின் தனித்துவத்தையும் ,முக்கியத்துவத்தையும் உணர்த்துவதாய் உள்ளதன்றோ .

எனவே ஆடி மாதச் சிறப்பினையும்,ஆடி அமாவாசைத் தினத்திலே நன்றிக்கடன் வழிபாடு பிதிர் தர்ப்பணம் செய்வதன் முக்கியத்துவத்தினையும் நாம் நன்குணர்ந்து செயற்படுவதன் மூலம் அம் மூதாதையர் காட்டிய நன்நெறிகளின் வழியில் நாமும் நல்வாழ்வு காண முயல்வோமாக.

**நீர்வை மணி**

## சட்டமா அதிபர் தலைமையில்

# சித்திரவதை ,கடத்தல் செயற்பாடுகளை தடுப்பது குறித்து ஆராய விசேடகுழு

(கொழும்பு)

சித்திர வதைகள் மற்றும் கடத்தல், காணாமல் போதல் தொடர்பான மனித உரிமை மீறல்களை தடுப்பது தொடர்பாக செயற்றிட்டம் ஒன்றை உருவாக்குவதற்கு சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் தலைமையில் விசேட செயற்பாட்டுக்குழு ஒன்றை இடர் முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க நியமித்துள்ளார்.

சித்திரவதைகள் மற்றும் காணாமல் போதல்கள் விவகாரம் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல் அவற்றை பாதுகாத்தல் தொடர்பாக இந்த செயற்பாட்டுக்குழு ஆராய்ந்து அவற்றை குறைப்பதற்கான முழுமையான யோசனைத் திட்டம் ஒன்றை குறுகிய காலத்துக்குள் அமைச்சர் மஹிந்த சமரசிங்கவுக்கு சமர்ப்பிக்கவுள்ளது.

இந்த செயற்பாட்டுக்குழு முன் வைக்கும் யோசனைத்திட்டத்தை அமைச்சரவைக்கு சமர்ப்பித்து அதன் அனுமதியைப் பெற்ற பின்னர் அவற்றை நடைமுறைப்படுத்து வதற்கான வேலைத்திட்டத்தை மேற்கொள்ளவுள்ளதாக இடர் முகா மைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தொடர்ந்து கருத்து வெளியிடுகையில்,மனித உரிமைகள் பாதுகாத்தல் அவற்றை மேம்படுத்தல் மற்றும் சித்திரவதைகள் , காணாமல் போதல்கள் என்பவற்றை தடுத்தல் தொடர்பில் தேசிய வேலைத்திட்டம் ஒன்றுக்காக யோசனைத்திட்டத்தினை உருவாக்குவதற்காக நியமிக்கப்பட்டுள்ள இந்த விசேட செயற்பாட்டுக்குழுவானது இலங்கையின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் சர்வதேசத்தின் பிரதிபலிப்புக்கள் குறித்து விசேடமாக ஆராயவுள்ளது.

1980ஆம் ஆண்டு முதல் இதுவரையான காலப்பகுதியில் இடம்பெற்ற சித்திரவதைகள் மற்றும் காணாமல் போதல்கள் தொடர்பிலான முறைப்பாடுகள் தொடர்பில் செயற்பாட்டுக்குழு ஆராயவுள்ளது. அத்துடன் குறித்த முறைப்பாடுகள் தொடர்பில் திகதி வாரியான வகைப்படுத்தலை மேற்கொண்டு பொலிஸாரின் உதவியுடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வுள்ளன. ஏற்கனவே விசாரணைகள் முடிக்கப்பட்டுள்ள முறைப்பாடுகள் தொடர்பிலும் தகவல்கள் பெறப்படவுள்ளன.

கடத்தல்கள் மற்றும் காணாமல் போதல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அரசாங்கத்தின் முழுமையான சகிப்புத்தன்மை கொள்கைக்கு ஏற்ப இந்த விசேட செயற்பாட்டுக்குழு ஆராயும். மேலும் மனித உரிமைகளை மேம்படுத்தல் மற்றும் பாதுகாத்தல் ,சிவில்,அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக மனித உரிமைகளை மேம்படுத்த போன்ற விடயங்கள் தொடர்பில் இந்த விசேட செயற்பாட்டுக்குழு சமர்பிக்கும் யோசனைத்திட்டத்தை அமைச்சரவை அனுமதிக்கு சமர்பிக்கவுள்ளதாகத்தெரிவித்தார். (ஓ-6)

# புதிய பாடத்திட்ட அறிமுக செயலமர்வு

(சாவகச்சேரி)

தேசிய கல்வி நிறுவனத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 29, 30 , 31 ஆகிய தினங்களில் யாழ்ப்பாண வலய கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் தரம் 12 ற்கான இந்து சமய , இந்து நாகரீக புதிய பாடத்திற்கான அறிமுக செயலமர்வு நடைபெறவுள்ளது.

தென்மராட்சி வலய பாடசாலைகளில் தரம் 12இல் இந்து சமயம், இந்து நாகரீகம் கற்பிக்கும் ஆசிரியர்களை தவறாது இச் செயலமர்வில் கலந்து கொள்வதை உறுதிப்படுத்துமாறு அதிபர்களை , வலயக்கல்விப்பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் கேட்டுக்கொள்கின்றார்.

(ஓ-6-29)

# அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மாணவர்கள் சாதனை

(யாழ்ப்பாணம்)

மன்னாரில் நடைபெற்ற வடமாகாண மெய்வல்லுநர் போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி 19 தங்கப் பதக் கங்களையும் 6 வெள்ளிப் பதக்கங்களையும் பெற்று வடமாகாண விளையாட்டுப் போட்டி யில் மாபெரும் சாதனை படைத்துள்ளது. வட மாகாணத்திலேயே கூடுதலான தங்கப் பதக்கங்களைப் பெற்ற ஒரே ஒரு பாடசாலை அருணோதயாக் கல்லூரி என்பது குறிப்பிடத் தக்கது.

அத்துடன் பெண்களுக்கான எல்லே போட்டியில் முதலாம் இடத்தையும் 15 வயதுப் பெண்களுக்கான கரப்பந்துப் போட்டியில் முதலாம் இடத்தையும் பெற்றுக் கொண்டுள்ளமையும் சிறப்பம்சமாகும். (ஓ)

## சுவாமி விவேகானந்தரின்

# எல்லாவற்றிலும் இறைவனைக் காணலாம்



எதற்கும் ஆசைப்படாதீர்கள். நம்மைத் துன்புறச் செய்வது எது? நமது துன்பங்கள் அனைத்திற்கும் காரணம் ஆசையே. நாம் ஒன்றை விரும்புகிறோம் ; அதை அடைய முடியவில்லை. விளைவு? துன்பம் . ஆசை இல்லாவிட்டால் துன்பமும் இல்லை. இங்கேயும் நான் சொல்வதைத் தவறாக புரிந்து கொள்வதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆகவே ஆசையைத் துறப்பது துன்பங்களிலிருந்து விடுதலை பெறுவது என்று நான் எதைக் குறிப்பிடுகிறேன் என்பதை இங்கே விளக்குவது அவசியம்.

சுவர்களுக்கு ஆசை கிடையாது அவை துன்புறுவதும் இல்லை. உண்மைதான். ஆனால் அவை வளர்ச்சி அடைவதும் இல்லை. இந்த நாற்காலிக்கு ஆசைகள் இல்லை ; அது துன்பம் அடைவதில்லை. ஆனால் அது ஒரு நாற்காலியாகத்தான் எப்போதும் இருக்கிறது. இன்பத்தில் ஒரு மகிமை இருக்கிறது. ; துன்பத்திலும் ஒரு மகிமை இருக்கிறது. ஏன், தீமையினால் பயன் கூட இருக்கிறது என்று நான் துணிந்து சொல்வேன். துன்பத்தால் நாம் பெறும் பாடம் நம் எல்லோருக்கும் தெரிந்ததே.





வல்வெட்டித்துறை கணபதி பாலர் பாடசாலையின் விளையாட்டு விழாவில் வான் வாத்தியம் சகிதம் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், மாணவர்களின் விளையாட்டுக்களின் ஒரு காட்சியையும், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வல்வெட்டித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் பி.கிருஷ்ணானந்தன் வெற்றிபெற்ற சிறுவனுக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:வி.டினேஸ்)

# யாழ்.பல்கலைக்கழக 2008/2009 கல்வியாண்டிற்கு...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

**தாதியர் சேவை**

எம்.மகிலன், ஆர்.ஆர். ராஜ்றெனுஸிஸ், ரி.மகேந்திரன், கே.கஜேந்தினி, கே.ஜனனி, ரி.கதர்சன், எம்.ரி.ஜே.லம்பேட், பி.துஷ்யந்தி, ஏ.விமலசாந்தன்.

**முகாமைத்துவபீடம்**

வை.பபிதா, யு.துமோனுதன், கே.பானதி, ரி.சங்கரதாஸ், ரி.குணசேகரம், ஆர்.பிரிய தாஷினி, எஸ்.நரேஷ், ஜி.சங்கீத், பி.ஜனனி, எஸ்.என்.ஜே.சுகன்யா, எல்.எம். ஆர். சிவ லிங்கம், ரி.அர்ச்சுதா, வை.செல்வராஜ், எஸ்.லதர்சன், எஸ்.ஜனனி, கே.விஜயபாலன், எம்.ஜனனி, வி.சி.எம்.ஜேனோ, எம்.ராஜேந்திரம், கே.ராஜி, ரி.டேசிகா, எஸ்.வைஷ்ணவி, எம்.ஜெயரட்ணம், ஆர்.ரம்சிகா, ஜி.டினேஷ்.

எல்.நாகராஜன், எஸ்.பிரதீபா, எஸ்.கவிதா, கே.பானுஜன், டபிள்யூ.எல்.மயூரன், எஸ்.வாகீசன், என். ஹர்சன், எஸ்.உஷா, வி.சேந்தரன், வை.தசிகா, எஸ்.கனிஷ்டா, எஸ்.ரவிக்குமார், ரி.துஷ்யந், பி.அகல்யன், என்.வரதலிங்கம், எஸ்.சிவகுமாரன், என்.பாலகிருஷ்ணசர்மா.

ஏ.சிவலோகநாதன், ஜே.றொகான் விக்ரர், கே.டிலோஜினி, ஏ.சிறீதரன், என்.தரங்கினி, எஸ்.மாதுமை, ரி.சிவஞானம், பி.தயான், பி.கோபாலகிருஷ்ணன், எஸ்.பி.பேய்சன், எஸ்.சி.இ.பிரியந்தன், ஏ.அருண் பிரான்சிஸ், கே.மதுஷன், ஏ.தர்மகுலேந்திரன், பி.சுலோசினா, பி.பரமநாதன், ரி.தேவகி, ரி.உஷாந், எஸ்.சுலக்ஷனா, பி.சுதாஜினி, ரி.நிரூஷன், கே.சாயினி, என்.அமுதினி

கே. உமாபிரியன், வீ.ஜி. கார்த்திகா, கே. கணபதிப்பிள்ளை, என்.இந்திரபாலன், ஆர் பேரானந்தசிவம், என்.அனற்டிலக்சன், கே. துசாந்தன், ரி. அருள்குமரன், ரி.தவறஞ் சினி, ஆர் .ரவிராசா, ஏ.ஆதவன், கே.மயூரன், பி.குமாரசிங்கம், என்.அருளாளன், ஜி.சிந் துஜா.

ஆர்.மலர்வேணி, கே. நிரோஜா, ரி.சபேஸ் மோகன், என்.ஜீவராஜசிங்கம், கே. கிரிதரன், ஜி.பிரசாத், ரி.எவ்.பெர்னாண்டோ, எம்.வின தரன், என்.எஸ்.லோகு, எஸ்.ரி. டயஸ், என். நிரோஜா, எவ்.ஆர்.ரி.லியோன், எஸ்.எச்.கே. டலிமா, ஏ.சிந்துஜா, எஸ்.ஞானகுமார், எஸ்.கஜி பன், எஸ்.சுரேன், எஸ்.சுகந்தினி, பி.உதய குமார், கே.அச்சுதன், எஸ்.சதீசன், எஸ்.பிரி ந்தா, வி.திருவிழி, பி.ஜீவராஜன், ஆர்.கரு ணாகரன், கே. ராதிகா, வி.சொரூபன், எஸ்.சர் மிளன், எஸ்.கிரிசன், வி.அனோஜன், பி.ஜம் ஜதா, எஸ்.தனுஜா, ஜே.கிரிவதனா, யூ.கோமதி, ரி.கேதீஸ்வரன், ஜே.கஜவதனா, ஆர்.துசாந் தினி, எம்.சிவமனோகரி, எஸ்.உலகநாதன், எஸ்.மயூரன், என். கரிகரன், எஸ்நாகலிங்கம், எஸ்.தனோஜன், ரி.பிரம்மியா, எஸ்.நாகராசா, ரி.திசாந்த்.

**சங்கீதம்**

ரி.கருணாகரன், ஜெ.ஜோஜ், எஸ். பவித் திரா, எஸ்.சுந்தர பிரசாத், ரி.ஆனந்த ராசா, ஆர்.தனுர்சிகா, எஸ்.பத்மநாதன், ரி.ஜென ரஞ்சனி, வி.வினோஜா, யூ.கௌசிகா, ஜெ. தர்மிலா, வி.துசியா, எல்.அருமைதுரை, எஸ்.அருள்நந்தி, எஸ்.அமிர்தவர்சினி, ஆர்.அனுதா, ஜெ.லாவண்யா, ரி.பயிற்றா, வி.ராங்கினி, கே.சுஜாதா, எம்.பிரியா, ரி.ஜெய ராஜா, என்.விஜேந்திரா, பி.சிந்துஜா, ரி.சிந்து ஜா, ஏச்.எஸ்.சர்மா.

எஸ்.நீதிமதி, ஆர்.சிவதர்சினி, பி.யசிந்தா, ஆர்.சிவதர்மினி, பி.மகேஸ்வரன், ஜெ.ஆர். பி.ஜெ.லிற்றினி, என்.சுரானி, பி.கிருபாலினி, கே.சுகிர்தா, கே.சோபிகா, என்.செல்வசோதி, எச்.சண்முகலிங்கம், ஆர்.அஜிதா, எக்ஸ். டபிள்யூ.ஜெ.கமலிறா, எல்.எதிர்குலசிங்கம், ரி.யாழினி, வை.சசிந்தா,

எம்.நவரட்ணம், இ.ரூபினி, ஆர். நிஷாந்தினி, எஸ்.துஷானி, எஸ்.நிரோசா, ஜெ.சாளினி, கே.யோகேஸ்வரன், வை.செல் வராஜா, எஸ்.நிரோசன், பி.துர்காஜினி, என்.பிரதீபா, என்.சுந்தரலிங்கம், வி.மடோ னா, எம்.ஜெனற், எம்.லக்சிகா, கே.கிரிஜா, எம்.சோபிதா, கே.சோபிகா, வி.முருகையா, எஸ்.தர்மபாலன், எஸ்.ஹேமா, கே.சசிகலா, ஆர்.ராசமாணிக்கம், பி.பவ்ஜா.

**நடனம்**

கே.பி.எஸ். சிறிவேணி, டீ.பிரியடர்சினி, பீ. தேவராஜ், வி.அபிசாரிகா, எஸ்.சிவஞான லிங்கம், எ.சிந்துஜா, ரி. சுசிதா, எஸ்.விஜிதா, எல்.தவராஜா, ஜி.சிபேஜா, எஸ்.குமர நாயகம், கே. ராஜகுமாரன், வீ.கஜானி, எஸ். வேவிகா, வீ.யாழினி, ஜே.லக்சலா, யூ.கன கேந்திரம்.

எ.துவாரகா, எஸ்.செல் வரத் தினம், ஆர். இன்பரஜ், ஆர் .செல்லப்பிரியா, எஸ்.உமா, பீ.கந்தசாமி, ரீ. சர்மிளா, வீ.கஜி நிலா, ஆர் . ராஜதுரை, ஜே.தசிந்தா, எஸ்.பிர தீபா, எஸ். சிவதாரணி, எ.சுதேசனா, கே. ராஜரட்ணம், எஸ். வைஷ்ணவி, பீ.கிருஸ்ண குமாரி, ரீ.எஸ். டக்சியா , எவ்.ஆர். எஸ்.சாளினி, ஆர் .டிலாஜினி, எம்.எஸ். குலாஸ், எம்.நீரி ஜா, எஸ். கிறிஸ்ரினா, டபிள்யூ.யோகதாசன், கே.சிந்துஜா, வீ.சதானந்தசிவம், ஜே.செல் வராஜா, எ.பத்மபிரியா, வீ.சுவாதிகா, டீ.புஸ் பராஜா, பீ.பீ.மேகலா, ஜே.பவித்தா, ஜீ.நிஜ ந்தா, எஸ்.மோட்சாயினி, ஆர்.திவாகினி.

**சித்திரமும் வடிவமைப்பும்**

சி.நிலானி, ரி.கணேஸதாஸ், ரி.கிருஷ்ண பிரியா, கே.பிரதீசன், எம்.புரந்தரா, ரீ . தனு ஷன், அய்.நிஷாந், வை.சிவிந்தன், எஸ்.வருண், கே.தர்சிகா, எஸ். நிரோஜன், எம்.எ.நஜ்லா, ஜே.எம்.அபிராமி, ஆர்.நிரோசன், பி.புஸ்ப காந்தன், பி.உதயகுமார், கே. அன்பரசன், எல்.றஜீப்கான், என்.விமலநாதன், என். சவீசன் ,எவ்.எஸ்.எஸ். கஸன், எம்.ஐ. தாஸரிபா, எம்.எ.எப்.பர்சானா, ஜி.சம்வர்தினி, எ.எம். எச்.பார்வின்.

## புதிய நிர்வாக சபைத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

வலி வடக்கு ஆயுள் வேத பாதுகாப்புச் சபையின் நடப் பாண்டிற்கான புதிய நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

இதில் தலைவராக டாக்டர் வை. வரத லிங்கம், செயலா ளராக டாக்டர் சு.துஷயந்தி, பிரதித் தலைவர்களாக பொ. வேலாயுதம், சி. அருளானந்தம் , பிரதிச் செயலாள ராக சி .சுப் பையா , கணக்காய்வாளராக டாக்டர் வ. பாமினி, ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள் ளனர். (ஓ-6-27)

## சின்னமடு மாதா யாத்திரைத்தல திருவிழா

சின்னமடுமாதா யாத்திரைத்தல திருவிழா எதிர்வரும் 27 ஆம் திகதி மாலை 4 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஓகஸ்ட் மாதம் 4ஆம் திகதி மாலை 3.30 மணிக்கு நற்கருணை விழாவும், 5 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் இடம் பெறவுள்ளது.

இதற்கான பஸ் பயண ஒழுங்குகள், தங்குமிட வசதிகள் என்பன மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் அனைவரையம் இதில் கலந்து கொள்ளுமாறு பரிபாலகர் அருட்திரு யே. அ.அருள்தாசன் கேட்டுக்கொள்கின்றார்.

5ஆம் திகதி காலை 6.30 மணிமுதல் யாழ்ப்பாணத்திலிருந்து விசேட பஸ் சேவை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-4)

## கலந்துரையாடல்

நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலய புனருத்தாரணம் மற்றும் நித்திய பூசை தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தென்புலோலி உபய கதிர்காம முருகன் ஆலய மண்டபத்தில் ஆலய பரம் பரைத் தலைவரும் நம்பிக்கைப் பொறுப்பாள ருமான மு.சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

ஆலயசெயற்பாடுகள் தொடர்பான முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்படவிருப்பதால் நாகர் கோவில் மக்கள் அனைவரையும் கலந்து கெள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கிறார்கள். (ஓ-35)

✠✠✠

வலிகாமம் மேற்கு பிரதேச இந்து ஆல யங்களின் அபிவிருத்திகள் தொடர்பான கலந்துரையாடல் நாளை மறுதினம் வியாழக் கிழமை மாலை 3.30 மணிக்கு பிர தேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இதில் இந்து ஆலயங்களின் அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளதால் தங்கள் ஆலயத்தலைவர் அல்லது செயலா ளரை தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கானை வலிமேற்கு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ஓ-4)


## மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை

**இலவச கண்புரை (Cataract ) பரிசோதனை**

**காலம் : 22.07.2009 புதன்கிழமை மதியம் 1.00 மணியிலிருந்து**

**அனுசரணை :- ''மனித நேயம்'' அமைப்பு**

எமது வைத்தியசாலையில் வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள கண் புரையால் பார்வை பாதிக்கப்பட்டவர்களை Dr.S.குகதாசன் கண் சத்திர சிகிச்சை நிபுணர் அவர்கள் தலைமையில் பரிசோதனை நடாத்தி சத்திரசிகிச்சை செய்யப்பட வேண்டியவர்களை இனங்கண்டு சத்திர சிகிச்சை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளோம் என மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைப் பணிப்பாளர் சபை உரியவர்களுக்கு அறியத் தருகிறது.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வறுமைக் கோட்டிற்கு கீழுள்ளோர் பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(C/2879)



BOC ලංකා බැංකුව இலங்கை வங்கி

## அறிவித்தல்

இலங்கை வங்கிக்கு விரிவாக்கல் காரியாலயங்கள் நடாத்துவதற்காக தகுந்த கட்டடங்கள் பின்வரும் இடங்களில் தேவைப்படுகின்றன. கட்டடம் நகரின் மத்தியில் அமைந்ததாகவும் குறைந்தபட்சம் 500 சதுர அடியினைக் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும்.


தகுந்த கட்டடங்களை குத்தகைக்கோ, வாடகைக்கோ தர விரும்புபவர்கள் 30.07.09 க்கு முன்னதாக உதவிப் பொது முகாமையாளர், இலங்கை வங்கி, வட பிராந்தியம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு சகல விபரங்களையும் அறியத்தரும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

1. கொடிகாமம்
2. கைதடி
3. கொக்குவில் (குளப்பிட்டி சந்தியை அண்மித்ததாக)
4. நெடுந்தீவு
5. சங்கானை

ந.சிவரட்ணம்
இலங்கை வங்கி,
உதவிப் பொது முகாமையாளர்,
(வடபிராந்தியம்)
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல: 021 222 3985
021 222 2735/ 3945

(C/2877)






நீதி மற்றும் மறுசீரமைப்பு அமைச்சின் ஏற்பாட்டில் யாழ். பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட மக்களுக்கான நடமாடும் ஆட்பதிவு சேவை கடந்த சனிக்கிழமை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இதில் ஆட்பதிவு திணைக்கள ஆணையாளர் ஏ.ஜி.தர்மதாஸ, பிரதிப்பதிவாளர் நாயகம் சதாசிவ ஐயர், நீதிமற்றும் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் சுகத கம்லத், யாழ்.பிரதேசசெயலர் திருமதி எஸ்.தெய்வேந்திரன் ஆகியோர் உரை யாற்றுவதை மேலுள்ள படங்களிலும் நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்கள் மற்றும் பதிவுகளை மேற்கொள்ள வரிசையில் காத்திருக்கும் மக்களையும் படங்களில் காணலாம். (படம்:- அலுவலகச் செய்தியாளர்)

# பிளின்டொப் அபார பந்துவீச்சு; இங்கிலாந்து அணி வெற்றி

## 75 ஆண்டுகளின் பின் லோட்ஸில் வரலாறு படைத்தது

(லோட்ஸ்)

பிளின்டொப்பின் துல்லியமான பந்து வீச்சின் மூலம் இங்கிலாந்து அணி இரண்டாவது டெஸ்டில் 115 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலிய அணியை வீழ்த்தியது.

ஆஷஸ் தொடர் என வர்ணிக்கப்படும் இங்கிலாந்து–அவுஸ்திரேலிய அணிகள் மோதும் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் இங்கிலாந்தில் நடைபெற்று வருகிறது.

இதில் முதலாவது டெஸ்ட் சமனிலையில் முடிபுற்ற நிலையில் இரண்டாவது டெஸ்ட் லொட்ஸ் மைதானத்தில் கடந்த 16ஆம் திகதி ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 425 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித்தலைவர் ஸ்ரொரஸ் 161 ஓட்டங்களையும் குக் 95 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஹில் பென் ஹயூஸ் 4 விக்கெட்டுக்களையும் ஜோன்ஸன் 3 விக்கெட்டுக்களையும் சிடில் 2 விக்கெட்டுக்களையும் மைக்கெல் கிளார்க் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 215 ஓட்டங்களை எடுத்தது.

இதில் மைக்கெல் ஹஸி 51 ஓட்டங்களையும் ஹட்ரிச் 48 ஓட்டங்களையும் சிடில் 35 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அன்டர்ஷன் 4 விக்கெட்டுக்களையும் ஒனியோன்ஸ் 3 விக்கெட்டுக்களையும் பிரோட் 2 விக்கெட்டுக்களையும் பிளின்டொப் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸில் 210 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலையிலிருந்த இங்கிலாந்து அணி இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி 6 விக்கெட்டுக்களை இழந்து 311 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தி அவுஸ்திரேலிய அணிக்கு வெற்றியிலக்காக 522 ஓட்டங்களை நிர்ணயித்தது.

இதில் பிறிர் 61, கொலின்வூட் 54 ஓட்டங்களையும் பீற்றர்சன் 44 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் ஹயூரிஸ் 3 விக்கெட்டுக்களையும் சிடில் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 522 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி நேற்று முன்தினம் ஆட்டநேரமுடிபில் 5 விக்கெட்டுக்களையிழந்து 313 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் 5ஆவதும் இறுதி நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி இரண்டாவது இன்னிங்ஸில் 406 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்து 115 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் மைக்கெல் கிளார்க் 136 ஓட்டங்களையும் ஹடின் 80 ஓட்டங்களையும் ஜோன்ஸன் 63 ஓட்டங்களையும் எடுத்தனர்.



பந்துவீச்சில் அன்ரூ பிளின்டொப் 5 விக்கெட்டுக்களையும் சுவான் 4 விக்கெட்டுக்களையும் பிரோட் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் இங்கிலாந்து அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இப்போட்டியில் இங்கிலாந்து அணியின் வெற்றிக்கு திருப்பு முனையமைத்த அன்ரூ பிளின்டொப் ஆட்டநாயகனானார்.

இதேவேளை இங்கிலாந்து அணி 75 ஆண்டுகளின்பின் லோட்ஸ் மைதானத்தில் வெற்றி பெற்று வரலாறு படைத்தது.

# மன்சூர்- யூசுப் ஜோடி அசத்தல் பாகிஸ்தான் அணி கௌரவம்

(கொழும்பு)

மன்சூர் – யூசுப்பின் சிறப்பான இணைப்பாட்டத்தின்மூலம்பாகிஸ்தான் அணி நேற்றைய முதல் நாள் ஆட்ட நேர முடிபில் அதன் முதல் இனிங்ஸில் 7 விக்கெட்டுக்களையிழந்து 289 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி 3 டெஸ்ட், 5 ஒரு நாள் போட்டிகள் மற்றும் ஒரேயொரு இருபது -20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலிரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் இலங்கை அணி வெற்றி பெற்று தொடரை 2.0 என தனதாக்கிய நிலையில் மூன்றாவது டெஸ்ட் நேற்று கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி ஆரம்பததல பாவட் அலாம் 16, அணித்தலைவர் யூனிஸ் கான் 02 ஓட்டங் களுடன் ஆட்டமிழக்க 36 ஓட்டங்களை எடுத்து 2 விக்கெட்டுக்களையிழந்து தடுமாறியது. தனது மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த குர்ராம் மன்சூர் - மொகமட் யூசுப் ஜோடி 167 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்து அணியை மீட்டெடுத்தது.

இதில் குர்ராம் மன்சூர் [illegible]டனும் மொகமட் யூசுப் 90 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து சதம் பெறும் வாய்ப்பை இழந்தனர்.

தொடர்ந்து களமிறங்கிய சொகைப் மலிக் 45 ஓட்டங்களுடனும் மிஸ்பா உல் ஹக் 27 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

இந் நி[illegible] நேற்றைய முதல்நாள் ஆட்ட நேர முடிவில் பாகி[illegible]தான் அணி முதல் இனிங்ஸில் 7 விக்கெட்டுக்களையிழந்து 289 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் கம்ரான் அக்மல், கனேரியா ஆகியோர் தலா ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழக்காமல் களத்திலிருந்தனர். பந்து வீச்சில் திலான் துஷார 3 விக்கெட்டுக்களையும் நுவான் குலசேகர 2 விக்கெட்டுக்களையும் சமிந்தவாஸ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும்.



யாழ். வந்த போக்குவரத்துத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும அடங்கிய குழுவினர் யாழ்.புகையிரத நிலையம் , நகர பஸ் நிலையம் ஆகியவற்றை பார்வையிடுவதையும் வழிபாட்டிற்காக நல்லூர் கந்தன் ஆலயத்துக்கு செல்வதையும் படங்களில் காணலாம்.

## அ' புர வானூர்தி தள...

கட்டளைகளை வழங்க மற்றவர்கள் சிறு சிறு குழுக்களாக கம்பிவேலிகளை வெட்டிக் கொண்டு முகாமுக்குள் பிரவேசித்ததாக கைது செய்யப்பட்டவர் ஒப்புக் கொண்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் குழுவினர் முகாமுக்குள் அனுப் பப்பட்டு விட்டார்கள் என்ற தகவலை தான் செய்மதித் தொலைபேசி மூலமாக வன்னி தலைமையகத்திற்கு தெரியப்படுத்தியதாகவும் அதன் பின்னரே விடுதலைப் புலிகளின் வானூர்திகள் முகாம்மீது குண்டு வீசுவதற்காக அனுப்பப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

தகவல்களைச் சேகரித்துக் கொள்வதற்காக தானும் மற்றும் சிலவிடுதலைப்புலிபோராளிகளும் மூன்று தடவை அனுராதபுரம் வானூர்தி தளத்திற்கு வந்ததாகவும் ஆனால் தாம் இராணுவச் சீருடைகளுடன் சிங்கள மொழியில் சரளமாக பேசிக் கொண்டும் இருந்தமையால் தம் மீது யாரும் சந்தேகப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

தமது குழுவினர் நுவரவேவாவுக்கு அண்மையில் உள்ள காட்டுப் பகுதிக்குள் மறைந்திருந்ததாகவும் அதி நவீன கமராக்களைப் பயன்படுத்தி அநுராதபுரம் வானூர்தி தளத்தை படமெடுத்ததாகவும் தெரிவித்தார்.

அதன் அடிப்படையில் மாதிரி முகாம் ஒன்றை வன்னியில் தாம் அமைத்து அதில் பயிற்சியை நடத்தியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதல் நடத்தப்படுவதற்கு பத்து நாட்களுக்கு முன்பாக நுவரவேவா காட்டுப் பகுதிக்கு 21 கரும்புலிகள் உட்பட 24 விடுதலைப் புலிகள் வந்ததாகத் தெரிவிக்கும் பொலிஸார் அவர்கள் அங்கு தமது ஆயுதங்களை மறைத்து வைத்து விட்டு எவருக்கும் சந்தேகம் ஏற்படாதவாறு இராணுவச் சீருடைகளுடன் சிங்களத்தில் பேசியவாறு நடமாடியதாகவும் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்டவர் 26 வயதான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தபோரூபன் என அடையாளம் காணப்பட்டுள்ளார். முகாமுக்குள் நுழைந்து தாக்குதலை நடத்திய 21 கரும் புலிகளும் அந்தத் தாக்குதல் சம்பவத்தில் மரணமடைந்த அதே வேளையில் முகாமுக்கு வெளியிலிருந்து கொண்டு அவர்களுக்கான கட்டளைகளை வழங்கிக் கொண்டிருந்த மூவரும் பாதுகாப்பாகத் தப்பிச்சென்று விட்டனர். (சு-5)

## ஏ-9 பாதையூடான பஸ்...

மாதமளவில் மேலும் 6 புதிய பஸ்கள் வழங்கப்படும். எனவே இப் புதிய பஸ்கள் ஏ-9 பாதையூடாக யாழ்.-கொழும்பு, யாழ்.-கண்டி ஆகிய இரு போக்குவரத்து சேவைகளை தினமும் மேற் கொள்ள அரசு தயாராகவுள்ளது.

இச்சேவை இன்றும் ஆரம்பிக்கப்படலாம் நாளையும் ஆரம்பிக்கப்படலாம். எனவே விரைவில் ஏ-9 பாதையூடாக பஸ் சேவை ஆரம்பமாகும் என்றார். இதே வேளை யாழ்தேவி புகையிரத சேவையை விரைவில் ஆரம்பிப்பதே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் முக்கிய குறிக்கோள். அதற்கான முதற்கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ். புகையிரத நிலையத்தை புனரமைக்கும் பணிகள் அம்பாந்தோட்டை மக்களின் முழுமையான பங்களிப்புடன் முன்னெடுக்கப்படவுள்ளது.

1905 ஆம் ஆண்டு இருந்தது போன்று காங்கேசன்துறையிலிருந்து பளை வரையும் தாண்டிக்குளத்திலிருந்து கொழும்பு வரையும் புகையிரத சேவை முதலில் ஆரம்பிக்கப்படும்.

பளையிலிருந்து தாண்டிக்குளம் வரை புகையிரதப் பாதை அமைக்கப்பட்ட பின்பு யாழிலிருந்து நேரடியாக கொழும்பு புகையிரத சேவை ஆரம்பிக்கப்படும்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு புகையிரத சேவையை ஆரம்பிப்பதற்கு சீன நிறுவனம் ஒன்று நிதியுதவியளிக்கின்றது. இதற்காக அந் நிறுவனத்தின் குழு அடுத்த சில தினங்களில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும்.

யாழ்ப்பாணத்தில் இரவு 9 மணி தொடக்கம் அதிகாலை 4.30 மணி வரையிலிருந்த ஊரடங்கு தற்போது இரவு 11 மணியிலிருந்து அதிகாலை 4 மணி வரையாக குறைக்கப்பட்டுள்ளது. அதே போன்று போக்குவரத்து தடைகள் சோதனைச் சாவடிகள் என்பன படிப்படியாக குறைக்கப்படும் என்றார். (சு-5)


கருத்தரங்கு

இந்து நாகரிகம்

S. ஜெயக்குமார்

காலம்
22.07.2009, 23.07.2009
காலை 9 மணி.

வெளி மாணவரும் பங்குபற்றலாம்.

யூனிவேர்சல்
(யா/ இந்து மகளிர் கல்லூரி அருகே) (2888)


## பயண அனு...

கருத்துத் தெரிவித்த போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

யாழ்.- கொழும்பு பயணத்தை மேற்கொள்வதற்கு பாதுகாப்பு படையினரிடம் பெறப்படும் பாதுகாப்பு அனுமதியை நீக்குவது குறித்து ஆராயப்படுகின்றது.

இது தொடர்பாக உரிய தரப்பினரிடம் விசேட சந்திப்பொன்றை மேற்கொண்டு பாதுகாப்பு அனுமதியை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் கூறினார். (சு-5)


PC SYSTEMS
Total IT Solution Providers

- மொபிடெல் சிம்
- மொபிடெல் Reload சிம் (உங்கள் கடை / நிறுவனத்தின் பெயரில் பதிவுசெய்து தரப்படும்)
- மொபிடெல் உபகார சிம்
- மிகக்குறைந்த விலையில் கையடக்கத்தொலைபேசி

எம்மிடம் பெற்றுக்கொள்ளமுடியும்.

Sri Lanka Telecom Mobitel
We Care. Always.

Sub Dealer Mobitel

ஆலடிச் சந்தி, யாழ் வீதி, மானிப்பாய்.
0718034198
0712674055

இல.24, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.
0718034198
0712674055


## யாழில் ஆயுதக்குழு இல்லை...

அலுவலகத்தில் நேற்று காலை ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்று நடைபெற்றது. ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

கொழும்பில் இருந்து அழைத்து வரப்பட்ட சுமார் 65 ஊடகவியலாளர் மற்றும் யாழ்ப்பாண ஊடகவியலாளர் மத்தியில் அமைச்சர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்;

தோல்வி நிச்சயம் என உறுதிப்படுத்தப்பட்டுள்ள சில எதிர்க்கட்சிகளே தமது தோல்வியை நியாயப்படுத்த வடக்கில் ஆயுதக் குழுக்கள் நடமாடுகின்றன என்ற பொய் வதந்திகளைப்பரப்பி வருகின்றன.

ஆனால் யாழ்ப்பாணத்தில் ஆயுதக் குழுக்கள் எதுவுமில்லை. அரச படைகளே உள்ளன. இரண்டு கோரிக்கைகளை முன்வைத்தே ஜனாதிபதித் தேர்தலில் எமது கட்சி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு அளித்தது. ஒன்று புலிகள் அழிக்கப்பட்ட வேண்டும் என்பது. இரண்டாவது தமிழ் பேசும் மக்களுக்கு நியாயமான அரசியல் உரிமை வழங்கப்பட வேண்டும் என்பது.

இதில் முதல் கோரிக்கை நிறைவேற்றப் பட்டுள்ளது. இரண்டாவது கோரிக்கை விரைவில் நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. இதனை நாம் அமைச்சரவையில் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம். அத்துடன் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளையும் அமைச்சரவையில் முன்வைத்து படிப்படியாக நிவர்த்தி செய்து வருகின்றோம்.

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் நிவாரணக்கிராமங்களிலேயே தொடர்ந்தும் தங்க வைக்கப்படுவார்கள் என்றும் எதிர்க்கட்சிகள் பொய்ப் பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றன. அதில்உண்மையில்லை.

வவுனியாவிலுள்ள நிவாரணக் கிராமங்களில் தற்காலிகமாக தங்கவைக்கப்பட்டுள்ள இடம்பெயர்ந்த மக்கள் விரைவில் தமது சொந்த இடங்களில் குடியமர்த்தப்படுவர். அதற்கான சகல நடவடிக்கைகளையும் அரசு துரிதமாக மேற்கொண்டு வருகின்றது என்றும் அமைச்சர் கூறினார். (சு-5)

## நலன்புரி முகாமிலுள்ள...

உயர்நீதிமன்றம் இந்த உத்தரவைப்பிறப்பித்தது.

குறிப்பிட்ட நிவாரண நிலையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ள 13 வயது சிறுமியை அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதித்து விசேட வைத்திய நிபுணரினால் சிகிச்சைக்குட்படுத்தி வைத்திய அறிக்கையை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு இதுவரை நிறைவேற்றப்படவில்லை என உயர்நீதிமன்றத்திடம் சிரேஷ்ட சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவித்தார். இந்த சிறுமியை அநுராதபுரம் வைத்தியசாலையில் நேற்று முன்தினம் அனுமதிக்க முயற்சி எடுக்கப்பட்ட போதிலும் அநுராதபுரம் வைத்தியசாலையின் அனுமதி கிடைக்கவில்லை என சிரேஷ்ட சட்டத்தரணி சாலிய பீரிஸ் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

உயர் நீதிமன்ற நீதியரசர்களான சிராணி பண்டார நாயக்க சலிம் மயுத் ஜகத் பாலபட்ட பெந்தி ஆகியோர் முன்னிலையில் இந்த மனு நேற்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வட பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து நிவாரண நிலையங்களில் தங்கியிருப்பவர் களை நீதிவான் முன்னிலையில் அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்க ஏதேனும் வழிமுறைகள் இருக்கின்றதா என்பதும் குறித்து ஆராயுமாறு சட்டமா அதிபருக்கு உயர்நீதிமன்றம் இதற்கு முன்னர் வழங்கிய ஆலோசனைக்கு அமைய அரசாங்கம் செயற்பட்டு வருவதாக அர சாங்க சட்டத்தரணி நீதிமன்றத்திடம் தெரிவித்தார். (சு-3)

## தமிழ் மக்களுக்கு தீர்வு...

யாழ்ப்பாணத்திற்கு நேற்று வருகை தந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் போக்குவரத்து அமைச்சர் டலஸ் அழகப்பெரும, மின்சக்தி அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே ஆகியோர் அடங்கிய அமைச்சர்கள் குழு, டக்கா வீதியில் அமைந்துள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரசார அலுவலகத்தில் ஊடகவியலாளர் மாநாடொன்றை நடத்தியது.

இம் மாநாட்டைத் தொடர்ந்து யாழ்ப்பாண ஊடகவியலாளர்களை தனியாக சந்தித்த போக்குவரத்து அமைச்சர் டலஸ் அழகப்பெரும மேற்படி கருத்தை தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்;

இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வுத்திட்டம் முன்வைப்பதில் ஏற்கனவே தெரிவித்தது போன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச உறுதியாகவுள்ளார். அரசிடம் தீர்வுத்திட்டம் எதுவுமில்லை என எதிர்க்கட்சிகள் பல கருத்துத் தெரிவிக்கின் றன.

அத்துடன் தமிழர்களுக்கு தீர்வு வழங்க விட மாட்டோம் என ஆளும்கட்சியிலுள்ள கூட்டணிக்கட்சிகள் சில கூறுகின்றன. இங்கு விமல் வீரவன்சவும் கருத்துத் தெரிவிக்கலாம். மேதானந்த தேரரும் கருத்து தெரிவிக்க முடியும். ஆனால்; யார் தெரிவிக்கும் கருத்து பெறுமதியானது என கருத வேண்டும்.

யார் எதிர்த்தாலும் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு வழங்கவேண்டும் என்ற கொள்கையில் ஜனாதிபதி மகிந்த் ராஜபக்ச உறுதியாகவுள்ளார்.

இதனை நாட்டில் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டபின் கடந்த மே 19ஆம் திகதி ஆற்றிய உரையில் தெரிவித்தது போன்று தமிழ் மக்களுக்கு சகல உரிமைகளும் அளிக்கப்படும்.

அத்துடன் அரசியல் ரீதியான தீர்வும் வழங்கப்படும். ஆனால் அது வெளிநாட்டுப் பிரதியாக இருக்கமாட்டாது. நாட்டில் காணப்படும் 60 வருடப் பிரச்சினையை படிப்படியாகத் தான் தீர்வுகாண முடியும். கனவு காண்பவர் இல்லை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ. சொல்வதைச் செய்பவர்.

கிழக்கில் எவ்வாறு ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதோ அதே போன்று வடக்கிலும் படிப்படியாக அனைத்தையும் விரைவில் சீர்செய்வோம் என்றார்.

### கண்ணிவெடிகள் அகற்றியதும் மீள் குடியேற்றம்

வடக்கில் இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்கள் விரைவில் மீள் குடியேற்றப்படுவர். தற்போது கிளிநொச்சி ,முல்லைத்தீவு போன்ற மோதல் நடைபெற்ற பகுதிகளில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் ஆரம்பமாகின்றன.

அதன் பின்னர் அந்தப் பகுதிகளை ஐ.நா.பார்வையிட்டு மக்களை மீள் குடியமர்த்தலாம் என உறுதிப்படுத்திய பின்பு நலன்புரி முகாம்களிலுள்ள மக்கள் சொந்த இடங் களில் குடியமர்த்தப்படுவர் என்றார். (சு-5)


தேவை

எமது காமன்ஸுக்கு
- தையல் தெரிந்த பெண் பிள்ளைகள்
- கணனி இயக்குநர்கள் (கணக்கு பதிவுகள் மேற்கொள்ளக் கூடிய பெண் பிள்ளைகள்) தேவை.

தொடர்புக்கு:-
றொசானி காமன்ஸ்
263/1, இராஜகாரியர் லேன், மானிப்பாய் வடக்கு, மானிப்பாய்.
கிளை:- சபாபதிப்பிள்ளை வீதி, உடுவில் கிழக்கு, சுன்னாகம்.
(2983-இ)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.07.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.